# தமிழரசு

1-6-1984 75 காசு

திருவள்ளுவர் ஆண்டு 2015

ரக்தாக்ஷி - வைகாசி 19






உதகமண்டலத்தில் சுற்றுலாப் பயணிகள் சுற்றிப் பார்ப்பதற்குரிய வசதிமிக்க பேருந்தினை மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் (2-5-'84ல்) துவக்கி வைத்தார்.



தேனாம்பேட்டை திருவள்ளுவர் சாலையில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள மாநகராட்சி நடுநிலைப் பள்ளியை மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில், மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் (5-5-'84ல்) திறந்து வைத்தார்.



## பொதுமக்களின் நெஞ்சங்களில் நிறைந்த பெருந்தகை ராஜா சர்

தமிழக அரசியலிலும், தமிழ் இசை வளர்ச்சியிலும், தொழில் துறையிலும், கல்வித் துறையிலும் பெரும் பங்கு கொண்டு பணியாற்றிய ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள் 12—5—'84ல் மறைந்தார்.

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு. க. ராசாராம், மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன், தமிழக அரசு தலைமைச் செயலர் திரு. கு. சொக்கலிங்கம் இ. ஆ. ப. மற்றும் பல பெருமக்கள் மலர் வளையம் வைத்து இறுதி மரியாதை செலுத்தினர்.

13—5—'84 அன்று ராஜா சர் உடல் எரியூட்டப் பெற்றது.



## ராஜா சர் மறைவுக்கு மேதகு ஆளுநர் விடுத்த இரங்கல்

தமிழ்நாடு புகழ்பெற்ற ஒரு தலைவரை இழந்து விட்டது. இது பெரிய இழப்பாகும்.

பொதுமக்களின் முன்னேற்றத்திற்காக அவர் பல தொண்டுகளைச் செய்திருக்கிறார். பொது வாழ்க்கையில் அவர் ஓர் அமைச்சராகவும், சட்ட மன்ற உறுப்பினராகவும், சிறந்த கல்வியாளராகவும் பணியாற்றியிருக்கிறார்.

தமிழ் இசையின் வளர்ச்சிக்காக அவர் ஆற்றிய பணிகள் பொதுமக்களின் மனத்தில் என்றும் நிலைத்து நிற்கும்.

அவருடைய பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேதகு ஆளுநர்
திரு எஸ். எல். குரானா

## மாண்புமிகு முதல்வர் விடுத்த இரங்கற் செய்தி



தமிழுக்காக, தமிழ் இனத்துக்காக, கல்விக்காக பாடுபட்ட, மகத்தான சேவை செய்த, ஒரு நல்லவரை, பெரியவரை, பெரிய மனது படைத்தவரை இழந்திருக்கிறோம்.

இதை ஈடு செய்யும் வகையில் இன்னொருவர் இருக்கிறாரா என்று எந்த வகையில் பார்த்தாலும், அவர் இருந்த இடம் பூர்த்தி செய்ய முடியாத சூனியம் நிறைந்ததாகத் தெரிகிறது.

அவரது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர்
டாக்டர் எம். ஜி. ஆர்.

# செந்தமிழ் வளர்த்த செட்டிநாட்டரசர்

"பெருமைக்குரிய செயல் என்றால் உயிரையும் கொடுத்து, பழி வரும் செயல் என்றால் இவ்வுலக முழுவதுமே பெறுவதாக இருப்பினும் ஒதுக்கி வாழும் பண்பாளர்களால்தான் இவ்வுலகு நிலை பெற்றிருக்கிறது'' என்ற கருத்தைப் புறநானூற்றுப் பாடல் ஒன்று தெளிவாக்குகிறது. தன்னலமே கருதாது பிறருக்கென வாழும் பெற்றி பெற்ற பெருந்தகையாளர்கள் உலகில் உள்ளமையால்தான், மண்ணுலகு சிறந்தோங்குகிறது. அறச்சிந்தையும் அருளாண்மையும் விருந்தோம்பும் இயல்பும் விடாமுயற்சியும் மன்பதைக் கண் மனித இனம் ஏற்றம்காண வேண்டுமென்னும் அவாவும் பெருகிட வாழ்ந்த ஒப்பற்ற மனிதர், உயர் பண்பாளர் டாக்டர் ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள்

மறைந்த முத்தையா செட்டியார் அவர்கள் அண்ணாமலை எனும் ஆழ்கடலில் தோன்றிய ஒளியுமிழ் முத்து; செட்டிநாடெனும் மலையிடைப் பிறந்த தென்றல்; தமிழ் எனும் இனிமை சேர் யாழில் வெளிப்பட்ட இசை. கல்வியெனும் நந்தாவிளக்கில் ஏற்றிய தீபம்.

## அட்டைப்படக் கட்டுரை

'கானாடு காத்தான் போனால் வறுமை தொலையும்' என்ற பழமொழி உள்ளது. அறமும் பொருளும் நிறைந்த இந்நகரம் நகரத்தார் வாழும் ஊர்களுக்குத் தலைநகர் எனப் போற்றப்படுகிறது. தமிழக வள்ளல் பெருந்தகை ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களுக்கும் ராணி சீதை ஆச்சிக்கும் 5-8-1905ஆம் நாள், பாட்டி வீடான பள்ளத்தூரில் முத்தையா பிறந்தார்.

இவருக்குச் செட்டிநாட்டு மரபுப்படி அவரது பாட்டனாரான திரு. முத்தையா செட்டியாரின் பெயரிடப்பட்டது. இளமையில் தொடக்கக் கல்வியை வீட்டிலேயே ஆசிரியர்கள் மூலம் கற்றவர், 1916ல் ஒன்பதாவது வயதில் சென்னை வேப்பேரியிலுள்ள பிரசன்டேசன் கான்வென்ட்டில் சேர்க்கப்பட்டார். பின்னர் 1919-இல் ஈவார்ட் பள்ளியிலும், திருச்சியிலுள்ள செயின்ட் ஜோஸப் கல்லூரியிலும் படித்து எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்றார். புகழ் பெற்ற சென்னை மாநிலக் கல்லூரியில் அரசியலையும் வரலாற்றையும் விருப்பப் பாடமாக எடுத்து பி.ஏ. பட்டப் படிப்பில் தேர்ச்சி பெற்றார்.

அன்றைய வழக்கப்படி முத்தையா, தனது 12 வது வயதில் பள்ளத்தூரைச் சேர்ந்த இராமசாமி செட்டியாரின் செல்வி மெய்யம்மை ஆச்சியை வாழ்க்கைத் துணைவியாகக் கொண்டார். இவர்களுக்கு அன்பும் பண்பும் மண்டிய மக்கள் இருவர் பிறந்தனர். மூத்தவர் குமாரராஜா முத்தையா என்பவரும், இளையவர் திரு. இராமசாமி என்பவரும் ஆவர்.



**ஆ. முத்துசாமி**

**வெளியீட்டு அலுவலர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை.**

மாநிலக் கல்லூரியில் திரு. முத்தையா பயிலும்போது இந்தியாவில் பெரும்புகழ் படைத்த அறிஞர்களைப் பேராசிரியர்களாகக் கொண்டார். 1925ஆம் ஆண்டில் பி.ஏ. பட்டம் பெற்றார். இவர், எத்துறையில் ஈடுபட்டாலும் அத்துறைக்கு எழிலும் பயனும் தந்தார். திருக்குறள், தேவாரம், திருவாசகம் ஆகிய நூல்களில் மிகுந்த ஆர்வம் கொண்டு படித்து இன்புற்றார்.

ஐராவதி ஆற்றின் கரையில் அமைந்த இரங்கூனிலிருந்து சீனாவின் எல்லையிலுள்ள பாமோ வரை நாற்பது கிளைகளைக் கொண்ட வாணிபம் இவரது குடும்பத்தினருக்குப் பர்மாவில் இருந்தது. அங்கு ஓராண்டு தங்கி

யிருந்து வாணிப நுட்பங்களை யெல்லாம் அறிந்தார்.

இந்தியாவின் அழகுமிக்க நகரங்களுள் ஒன்றான சென்னை, 1933க்கு முன்னர் நகரசபையாகத்தான் இருந்தது. 1929ல் தனது 24 வது வயதில் சென்னை நகரசபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1931ல் சென்னை நகரசபையின் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சென்னை மாநகரின் முதல் மேயர் பதவியைத் தனது 27வது வயதில் ஏற்றவர் திரு முத்தையா அவர்கள்தான். 1934—35ல் மீண்டும் இரண்டாவது முறையாக மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மேயர் பதவி தனி ஒருவருக்குச் சொந்தமாக



இல்லாமல் ஓராண்டிற்கு ஒரு முறை மாறி மாறிச் செல்லும் நிலையை உருவாக்கியவர் இவரே!

1932ஆம் ஆண்டில் மேயராக இருந்த போது, அனைத்திந்திய வானொலியின் சென்னைக் கிளை உருவாவதற்கு முன்பு-ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள், சத்திய மூர்த்தி, டி. எஸ். கிருஷ்ணசாமி ஆகியோரின் உதவியுடன் மாநகராட்சியில் இந்தியாவிலேயே முதன் முதலாக வானொலி நிலையத்தை அமைத்தார். 200 மைல் தொலைவு வரை இந்த ஒலிபரப்பை மக்கள் கேட்க முடிந்தது.

ஆங்கிலேயர் இந்நாட்டை ஆண்டு கொண்டிருந்த போது செயல்பட்ட நீதிக்கட்சி இவரைத் தலைசிறந்த ஓர் அரசியல்வாதியாக அறிமுகப்படுத்தியது. திரு. பனகல் அரசர், தியாகராசசெட்டியார், பன்னீர் செல்வம், பி.டி ராஜன் முதலிய தமிழகத்துப் பெருமக்கள் பங்குபெற்ற நீதிக்கட்சியில் பொறுப்புமிக்க பல பதவிகளை ஏற்றுத் திறம்படச் செய்து முடித்தார். 1931ல் சட்டசபையில் நீதிக்கட்சியின் கொறடாவாகத் திகழ்ந்து தலைவராகவும் செயல்பட்டார். 1936ல் நீதிக்கட்சி ஆட்சியைக் கைப்பற்றியபோது அதில் அமைச்சர் பதவியை ஏற்றார். 1936-37ல் பொப்பிலி அரசரின் அமைச்சில் கல்வி, சுகாதாரம், உள்ளாட்சி நிர்வாகம் ஆகிய துறைகளைக் கவனிக்கும் பொறுப்பை ஏற்றார்.

1937ல் காங்கிரஸ் தேர்தலில் வெற்றி பெற்றாலும் சில காரணங்களால் அமைச்சர் அவையை அமைக்கவில்லை. இடைக்கால அமைச்சரவை எனப்பட்ட திரு கே.வி.ரெட்டியின் அமைச்சரவையில் மீண்டும் அமைச்சராக இடம் பெற்றார்.

1937-39ல் காங்கிரஸ் ஆளுங் கட்சியாகவும் மூதறிஞர் இராஜாஜி முதலமைச்சராகவும் இருந்தபோது எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவர் திரு. முத்தையா செட்டியார்.

1937ல் இந்திமொழித் திணிப்பையெதிர்த்துப் போராடியவர் இவர். சோமசுந்தர பாரதியார், மறைமலையடிகள் முதலிய தமிழ் புலவர்களுடன்முத்தையாசெட்டியார் அஞ்சாது கட்டாய இந்தியை எதிர்த்து முழக்கமிட்டார். சென்னை தங்கசாலையிலிருந்து தீவுத்திடல் வரையில் தமிழ்க் கொடியைத் தோளில் சுமந்து கொண்டு நடந்த பெருமைக்குரியவர் இவர்.

1929ஆம் ஆண்டிலேயே இவர், வங்கி விசாரணைக்குழுவில் உறுப்பினராக இருந்தார்; இம்பீரியல் வங்கியின் இயக்குநராக இருந்தார். 1940ல் தென்னிந்திய வணிகச்சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தென்னாட்டில் பெரிய வங்கியாக இன்று திகழும் இந்தியன் வங்கிக்கு 1962இல் ஏற்பட்ட நெருக்கடியைப் போக்கி, அதனை ஆல்போல் தழைக்கச் செய்த சிறப்பினுக்குரியவர் முத்தையா செட்டியார்.

நெடிய உயரமும் அகன்ற மார்பும் எடுப்பான நெற்றியும் சிரித்த முகமும் கொண்ட முத்தையா செட்டியாருக்கு 1941ல் ஜார்ஜ் மன்னர் 'சர்' என்ற பட்டத்தை அளித்தார்.

1948, ஜூன், 15ஆம் நாள் மறைவெய்திய இவரது தந்தையாருக்குப் பின்னர், பல்கலைக்கழகச் சட்டத்தின்படி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இணை வேந்தரானார். அயராது, கண்துஞ்சாது பல்கலைக் கழக வளர்ச்சியில் தாய்போல் ஆர்வம் காட்டிச் செயல்பட்டு வந்தார்.

இவர் ஏற்படுத்திய அறக்கொடையால் அண்ணாமலைநகர்,

## நல்லவை செய்த நாயகர்

ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களுக்கு இருக்கின்ற வசதிகளுக்கு அவர் பொது மக்களை நினைக்க வேண்டிய கட்டாயம் இல்லை.

ஆனால் ராஜா சர் அடிக்கடி நினைத்து நல்லவைகளையே செய்வதைப் பார்க்கும் போது அவரை மகாராஜா என்றே அழைக்கத் தோன்றுகிறது.

**தந்தை பெரியார்.**

## மனித இனத்தின் ஊதியம்

### பேரறிஞர் அண்ணா

ஈதல், இசைபட வாழ்தல் (புகழுடன் வாழ்தல்) ஆகியவைதான் மனித உயிருக்கு ஊதியம் என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் வள்ளுவப் பெருந்தகை கட்டளையிட்டிருக்கிறார்.

அத்தகைய புகழ்வாழ்வை மேற்கொண்டவர் ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள். நான் அவருடன் பல துறைகளில் சேர்ந்து பணியாற்றியிருக்கிறேன், வணிகத்துறை ஒன்றைத் தவிர! ஒரே அரசியல் கட்சியில் (ஜஸ்டிஸ் கட்சியில்) நாங்கள் அங்கம் வகித்திருக்கிறோம். என்னை அந்தக் கட்சியின் சார்பில் சென்னை கார்ப்பரேஷனுக்கு நிறுத்திவைக்கக் கட்சியின் மேலிடத்தலைவர்கள் கூடிப் பேசினர்.

அப்போது சிலர், ''அண்ணாதுரை தேர்தலில் ஈடுபடும் அளவுக்கு வசதியான குடும்பத்தில் பிறக்கவில்லை'' என்று ஆட்சேபம் தெரிவித்தார்கள். ஆனால் முத்தையா செட்டியார் அவர்கள்தான் ''இது போன்ற கண்ணோட்டம் இனிக் கூடாது. வாலிப வயதில் பொதுத் தொண்டில் ஆர்வம் இருப்பவர்கள்தான் இனித் தேர்தலில் நிற்க வேண்டும். ஆகவே அண்ணாதுரையை நிறுத்தலாம்'' என்று வாதாடினார். எதிர்கால அரசியல் எப்படி உருவெடுக்கும் என்பதை அப்போதே அவர்கள் உணர்ந்திருந்தார்கள்.

அது மட்டுமல்ல; இந்தி புகுத்தப்பட்ட நேரத்தில் வசதியான குடும்பத்தில் பிறந்திருந்தாலும், சென்னையிலுள்ள தங்கச்சாலையிலிருந்து ஐலண்டு மைதானம் வரை தமிழ்க் கொடியைத் தோளில் சுமந்து கொண்டு நடந்தார்.

(அண்ணாவின் சிந்தனைச் செல்வம் என்னும் நூலிலிருந்து 1969)

---

சிதம்பரம், சென்னை, செட்டிநாடு ஆகிய இடங்களில் துவக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், தொழில்நுட்பப் பள்ளிகள் பல புரக்கப்பட்டு வருகின்றன.

*1952* பொதுத் தேர்தலில் திருப்பத்தூர் தொகுதியில் நின்று வெற்றி பெற்றார்.

*1957*ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் காரைக்குடி தொகுதியில் போட்டியிட்டு வென்றார். இத்தேர்தலுக்குப் பின்னர், *30* ஆண்டுகளாகத் தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர், அரசியலில் இருந்து ஓய்வு பெற முடிவு செய்தார். இருப்பினும் *1964*ஆம் ஆண்டில் சட்ட மன்ற மேலவையின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

''தமிழ் அறிஞர்களைப் பாராட்டுவதும் தமிழுக்குத் தொண்டு செய்வதும் என் வாழ்வின் குறிக்கோளாகும்'' என்று கூறினார். ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள்.

தமிழ்மொழி வளர்ச்சிக்கு வாரிக் கொடுத்த வள்ளலாகத் திகழ்ந்தார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையில் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களைத் தமிழ்ப் பேராசிரியராக நியமித்த பெருமைக்குரியவர். சொல்லின் செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளையை இப்பல்கலைக் கழகத்தில் பணிபுரிய அழைத்தார். நாவலர் சோமசுந்தர பாரதியாருக்கு டாக்டர் பட்டம் வழங்கக் காரணமாயிருந்தார்.

அண்ணாமலைச் செட்டியாரின் பெருமுயற்சியால் புத்துணர்வு பெற்ற தமிழிசைப் பயிரைச் செழிப்புற வளர்த்த திறன்மிக்க தமிழன்பர் இவர்.

செல்வத்துப் பயன் ஈதல் என்ற பண்பை நாளும் கடைப்பிடித்து, எப்போதும் எண்ணற்ற உதவிகள் புரிந்த கொடையாளர் இவர்.

'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற நாவுக்கரசரின் மொழிக்கு எடுத்துக் காட்டாக வாழ்ந்தவர்.

'நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்' என்ற பொருளுக்கு ஏற்பக் குடும்பத் தலைவரான இவர், பல்வேறுபட்ட துறைகளில் தொடர்பு கொண்டு வாழ்ந்தார். தலைசிறந்த அறிஞராகவும், ஒப்புயர்வற்ற கல்வியாளராகவும், தண்டமிழ்க் காவலராகவும், நாவன்மைபெற்ற பேச்சாளராகவும், நாட்டை வளப்படுத்தும் தொழிலதிபராகவும், இனிமை இயல்புகள் செறிந்த பண்பாளராகவும் தொண்டுகள் செய்து மகிழும் தொண்டராகவும் திகழ்ந்த பீடுகொள் வரலாற்றைப் படைத்தவர், அண்மையில் *(12-5-84)* மறைந்த ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள். அவர் ஒரு தனிமனிதரல்லர்; நிறுவனம். பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் புகழ்ந்துரைத்த சிறப்பினுக்குரிய பெருவாழ்வு வாழ்ந்த தமிழ்ச் சான்றோரின் பண்பு நலன்களும் செயற்கரிய செயல்களும் தமிழகத்தின் வரலாற்றில் நிலைத்திடும் தன்மையனவாகும்.

தமிழ்நாடு அரசு நிதியிலிருந்து, காவல் துறையில் பணிபுரியும் அலுவலர்களுக்கு ரூ. 269.30 இலட்சம் மதிப்பீட்டில் சென்னை புதுப்பேட்டையில் ராஜரத்தினம் விளையாட்டரங்கத்திற்குப் பின்பக்கத்திலுள்ள 5.35 ஏக்கர் நிலப்பரப்பில் 604 குடியிருப்புகளைத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் கட்டியுள்ளது.

12 வீடுகள் சேமப்படை போலீஸ் ஆய்வாளருக்கும் 48 வீடுகள் இளநிலை போலீஸ் ஆய்வாளர்களுக்கும் 544 வீடுகள் தலைமைக் காவலர் மற்றும் காவலர்களுக்கும் கட்டப்பட்டுள்ளன.

1982-ஆம் ஆண்டு செப்டம்பரில் தொடங்கப்பட்ட இத்திட்டம் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் முடிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்தக் குடியிருப்புகளுக்குச் சாலை வசதி-தெரு விளக்குகள் - குடிநீர் வசதி மற்றும் வடிகால் வசதிகள் போன்ற இன்றியமையாத தேவைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

இக்குடியிருப்புகள் மே 1-ஆம் நாளன்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களால் திறந்து வைக்கப் பெற்றன.

## சென்னையில் வேறு பகுதிகளில் நிறைவேற்றப்பட்டுள்ள காவலர் வீட்டு வசதித் திட்டங்கள்

இராசா அண்ணாமலைபுரத்தில் ரூ. 92 51 இலட்சம் மதிப்பீட்டில் 288 குடியிருப்புகளும், அண்ணா நகரில் ரூ.44.23 இலட்சம் மதிப்பீட்டில் 111 குடியிருப்புகளும், மயிலாப்பூரில் ரூ. 7.33 இலட்சம் மதிப்பீட்டில் 24 குடியிருப்புகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

## மாவட்டங்களில் காவலர் வீட்டு வசதித் திட்டங்கள்

பாளையங்கோட்டையில் ரூ. 29.55இலட்சம் மதிப்பீட்டில் 104 குடியிருப்புகளும், கோயம்புத்தூரில் ரூ. 138.84 இலட்சம் மதிப்பீட்டில் 668 குடியிருப்புகளும்-தஞ்சாவூரில் ரூ. 37 இலட்சம் மதிப்பீட்டில் 132 குடியிருப்புகளும், திருச்சி சிந்தாமணியில் ரூ. 37.29 இலட்சம் மதிப்பீட்டில் 104 குடியிருப்புகளும், சேலத்தில் ரூ. 76.69 இலட்சம் மதிப்பீட்டில் 256 குடியிருப்புகளும், நாகப்பட்டினத்தில் ரூ.111 இலட்சம் மதிப்பீட்டில் 377 குடியிருப்புகளும், தர்மபுரியில் ரூ. 30 இலட்சம் மதிப்பீட்டில் 132குடியிருப்புகளும், ஈரோட்டில் ரூ. 13.08 இலட்சம் மதிப்பீட்டில் 36 குடியிருப்புகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

காவலர் வீட்டு வசதித் திட்டத்தின் வாயிலாக பாளையங்கோட்டையில் 16 அங்காடிகளும், ஈரோட்டில் 24 அங்காடிகளும் கட்டி முடிககப்கப்பட்டுள்ளன.

கோவை மாவட்டத்தைச் சேர்ந்த பொள்ளாச்சியில் 255 குடியிருப்புகள், ரூ. 149.32 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன.

# காவலர் குடியிருப்புத் திட்டம்



# ஆதி திராவிடர் பழங்குடி மக்களுக்கு

# வீட்டு வசதிப் பணிகள்

எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும் என்பது மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் கொள்கையாகும்.

இதன் அடிப்படையில் நாட்டில் இதர மக்களோடு ஒப்பிடும் போது முன்னேற்றம் இல்லாது இருந்து வந்த ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடிமக்கள் முன்னேற்றம் அடைவதற்குப் புரட்சித் தலைவர் அரசு செயல்படுத்துகின்ற பல முனைத் திட்டங்களில் வீட்டு வசதி செய்துகொடுப்பதும் ஒன்றாகும்.

1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி தமிழ் நாட்டின் மொத்த மக்கள் தொகை 484 இலட்சமாகும். இதில் ஆதிதிராவிடர் 89 லட்சம் பேர்களும், 5 லட்சம் பேர்கள் பழங்குடியினர்களும் ஆவார்கள்.

இது மொத்த மக்கள் தொகையில், முறையே, 18 சதவீதமும், ஒரு சதவீதமும் ஆகும். ஆதி திராவிடர்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்தைத் தீவிரப்படுத்த புதிதாகக் கொண்டு வரப்பட்ட இரண்டு முக்கியக் குறிக்கோள்களுடன் கூடிய சிறப்பு - உள்ளடக்கத் திட்டம் 1980-81-ஆம் ஆண்டிலிருந்து மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்களால் செயல்படுத்தப்பட்டுவருகிறது.

அவைகளில் ஒன்று - ஆதிதிராவிடர்களில் பாதிப்பேர் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளனர். ஐந்தாண்டுக் காலத்தில் இவர்கள் வறுமையைப் போக்குதல்.

மற்றொன்று - ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகளான - குடிநீர் வசதி, மின்வசதி, சுகாதார வசதி, பள்ளிக்கூட வசதி முதலியவற்றைச் செய்து கொடுத்தல்.

இவ்விரண்டு நோக்கங்களையும் அடைய, அனைத்துத் துறைகளின் முயற்சிகளையும், அவைகளின் நிதி வசதிகளையும் பயன்படுத்தும்படி தமிழக அரசு ஆணையிட்டுள்ளது.

எங்கெல்லாம் புறம்போக்கு நிலங்கள் உள்ளனவோ அந்த நிலங்களை மாவட்ட ஆட்சியாளர்கள் மூலமாக ஆதிதிராவிடர் பழங்குடியினர்களுக்கு 3 செண்டுகள் வீதம் வீட்டு மனைகள் கொடுக்கப்படுகின்றன. முக்கியமாகத் தேவைப்பட்டால் தனியார் நிலங்களேகூட கையகப்



**ஏ. செல்லையாத் தேவர்**
**தலைவர்,**
**தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்.**

படுத்திக் கொடுக்கப்பட்டு வருகின்றன.

இதுவரை 4,23,282 மனைகள் கொடுப்பதற்காக, 26,494 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு 3,78,619 வீட்டு மனைகள் தரப்பட்டன. மீதமுள்ள வீட்டு மனைகள் விரைவில் கொடுக்கப்படவிருக்கின்றன.

மேற்படி நிலங்களைக் கையகப் படுத்துவதற்காக 1983 ஆம் ஆண்டு டிசம்பர் முடிய 1,175 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டது. 1984-85 ஆம் ஆண்டிற்கு நிலம் கையகப்படுத்துவதற்காக 125 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தனிமைப் படுத்தப்பட்டுள்ளோம் என்னும் உணர்வைப் போக்கவும் - எல்லா வகுப்பு மக்களிடையே ஒருமைப்பாட்டை ஏற்படுத்தவும் ஒதுக்கீடு செய்யப்படும் வீடுகளில் அல்லது வீட்டு மனைகளில் ஆதிதிராவிடர்களுக்காக 80 விழுக்காடும், பிற்படுத்தப்பட்ட பிரிவில் உள்ள ஏழைகளுக்கு 10 விழுக்காடும், உயர் வகுப்புப் பிரிவில் உள்ள ஏழைகளுக்கு 10 விழுக்காடும் இலவசமாகக் கொடுக்கப்படவேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணைப்பித்துள்ளார்.

தேசிய கிராமியப் பகுதி வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனைகள் கொடுப்பதற்காக கையகப்படுத்தப்பட்ட மனைகளைச் சமப்படுத்துமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குத் தமிழக அரசு ஆணையிட்டுள்ளது.

ஆதிதிராவிடர் பழங்குடியினர் விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள், மீனவர்கள் மற்றும் துப்புரவாளர்களுக்கு வீடுகள் கட்டித் தரும் பொறுப்பையும் மாணவர், இல்லங்கள், பள்ளிக் கட்டடங்கள், சமுதாயக் கூடங்கள் ஆகியவற்றைக் கட்டும் பணியையும் தமிழ்நாடு ஆதிதிராவிட வீட்டு வளர்ச்சிக் கழகத்திடம் தமிழக அரசு ஒப்படைத்துள்ளது. இதைத்தவிர, ஆதிதிராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளுக்கு இந்த நிறுவனம் பொறுப்பு வகிக்கிறது. இதற்கான முதலீட்டுப் பணம் தமிழக அரசால் அளிக்கப்படுகிறது.

1979-ஆம் ஆண்டு முடிய இந்தக் கழகம் ஆதிதிராவிடர்களுக்கு 41,675 வீடுகளைக் கட்டி இலவசமாக வழங்கி உள்ளது.

## சிறந்த முறையில் பணியாற்றும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

**இந்தியாவிலேயே தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் சிறப்பான முறையில் பணியாற்றி வருகிறது. திட்டங்களைச் செயல்படுத்துவதிலும் குறித்த காலத்திற்குள்ளாகவே வீடுகளைக் கட்டி முடிப்பதிலும் நாட்டின் முதன்மையான இடத்தை தமிழக வீட்டு வசதி வாரியம் பெற்றிருக்கிறது.**

**திரு. முல்க் ராஜ்**

**(வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக்கழகத்தின் தலைமை நிதித்துறை அலுவலர் 22.5.84ல் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில்)**

1979-80, 1980-81 ஆண்டுகளில் 10,000 வீடுகள் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டது. 1982-83 முதல் ஆதிதிராவிடர் மேம்பாட்டுச் சிறப்புத் திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டுக் கிராமங்களில் 1591 வீடுகள் கட்டி இலவசமாகத் தரப்பட்டன.

வீடு கட்டுவதற்காகக் கொடுக்கப்பட்ட 4,000 ரூபாய், 6,000 ரூபாயாக இப்போது உயர்த்தப்பட்டுள்ளது. இந்த 6,000ரூபாய் இலவசமாக அரசு மூலம் ஆதிதிராவிடர் பழங்குடி மக்களுக்கு வழங்கப்படுகிறது.

இதைத்தவிர ஆதிதிராவிடர்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்துவதற்காக ஆதிதிராவிட வளர்ச்சி நிறுவனத்திற்கு நிதி உதவி புரியும் திட்டம் ஒன்றை அரசு கொண்டு வந்துள்ளது. இத்திட்டம் செயல்படுத்தத் தேவையான பங்கு முதலீட்டில் 49 சதவீதம் மத்திய அரசும் 51 சதவீதம் மாநில அரசும் அளிக்கின்றன. இத்தொகையிலிருந்து வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள ஆதிதிராவிடர்களுக்குத் தங்களது வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள இலாபகரமான தொழில்களைத் தொடங்குவதற்கான மொத்தச் செலவில் கால் பங்குத் தொகையை குறைந்த வட்டியில் கடனாக வழங்குகிறது.

1983 ஆம் ஆண்டு டிசம்பர் வரை 75,395 ஆதிதிராவிட குடும்பங்களுக்கு 459 இலட்சம் ரூபாய் தொழில் தொடங்க வழங்கி உள்ளது. 1984-85 ஆம் ஆண்டிற்கு இதற்காக 200 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின் மூலம் வீடு கட்டுவதற்கு 6,000 ரூபாய் கொடுக்கப்படுகிறது. இதில் 1,000 ரூபாய் மான்யமாகத் தரப்படுகிறது.

இதில் ஒரு சிறப்பு அம்சம் என்னவென்றால், ஆதிதிராவிடர் பெரும் அளவில் உள்ள இடங்களில் வீடு கட்ட முன்வரும் இதர வகுப்பினர்களுக்கும் இந்தச் சலுகை அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தில் இதுவரை 21,734 வீடுகள் கட்டப்பட்டன. இதில் 18,003 வீடுகள் ஆதிதிராவிடர்களுக்குக் கொடுக்கப்பட்டது.

1984-85 ஆம் ஆண்டிற்கு 600 லட்சம் ரூபாய் இத்திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர்களுக்கும், பழங்குடியினர்களுக்கும் வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. சமவெளியில் வீடுகட்ட 6,000 ரூபாயும், மலைப் பகுதியில் வீடுகட்ட 9,000 ரூபாயும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் 1983-84 ல் கட்டப்பட்ட 19,000 வீடுகளில், 10,000 வீடுகள் ஆதிதிராவிடர் பழங்குடி மக்களுக்குக் கொடுக்கப்பட்டன. தன்னிறைவு வீட்டுமனைத் திட்டத்தில் 174 எக்டேர் நிலப்பரப்பில் 12,549 மனைகள் உருவாக்கப்பட்டு, 1980 ஆம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இதே திட்டத்தின் இரண்டாம் பகுதியாக 180 எக்டேர் நிலப் பரப்பில் 15,036 உருவாக்கப்பட்ட வீட்டுமனைகளிலும் ஆதிதிராவிட பழங்குடி மக்கள் இந்த ஆண்டும் பயன் அடைய இருக்கிறார்கள்.

ஆதிதிராவிடர் - பழங்குடி மக்களுக்காகப் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் 17,000 ரூபாய் வீதத்தில் செலவு செய்து 182 குடியிருப்புகள் கட்டித்தரப்பட்டுள்ளன.

1983-84ல் 41 லட்சம் ரூபாய் செலவு செய்து, தமிழக அரசு, 137 தனிநபர் குடியிருப்புகளையும் ஏற்படுத்தியுள்ளது.

ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை நடத்தும் 705 அரசு இல்லங்கள் தமிழக அரசின் கட்டடங்களில் அமைந்துள்ளன. ஆதிதிராவிட பழங்குடியினர் மாணவ மாணவியர்களுக்காக 241 இல்லங்கள் கட்டுவதற்குத் தமிழக அரசால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இவற்றில் 127 இல்லங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

114 இல்லங்கள் கட்டுமானப் பணியில் இருக்கின்றன.

1984-85 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மாணவ, மாணவியர் இல்லங்கள் கட்டுவதற்காக ரூ.240 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

1979 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டி ஒதுக்கப்படும், மொத்த வீடுகளில் 10 சதவீதம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்காக வழங்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை பிறப்பித்தார்.

இதனால், இரண்டு விதத்தில் புரட்சித்தலைவர் அவர்கள் ஆதிதிராவிட பழங்குடிப் பெருமக்களுக்கு உதவி இருக்கிறார்.

ஒன்று - ஒரே குடியிருப்பில் ஆதிதிராவிடர், பழங்குடி மக்கள் இதரமக்களுடன் ஒன்றாகக்கலந்து வாழும் வாய்ப்பை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்படுத்தி இருக்கிறார்.

இரண்டாவதாக, வீட்டு வசதி வாரியத்தின் மொத்த முதலீட்டு மூலதனத்தில் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 20 கோடி ரூபாய் ஆதிதிராவிடர் - பழங்குடியினருக்காக வீடுகட்டும் நிலைமையை ஏற்படுத்தி இருக்கிறார்.

இதோடு மட்டும் அல்லாமல் ஆதிதிராவிடர் பழங்குடியினரின் சமூக - பொருளாதார மேம்பாட்டுக்காகப் புரட்சித் தலைவரின் தமிழக அரசு மொத்தம் ரூ.54.29 கோடி செலவு செய்யத் திட்டமிட்டுள்ளது.

# தமிழரசு

16-6-1984
இதழ்



தமிழ்நாடு அரசின்
நான்காண்டுப்
பணிகள்
தொகுப்பு மலராக
வெளிவருகிறது

*அரசு ஆற்றியுள்ள அரும்பணிகள்*
*குறித்து*

மாண்புமிகு முதல்வர்,
அமைச்சர் பெருமக்கள்
எழுதுகின்ற
சுவையான கட்டுரைகள்
மற்றும் செய்தித் திரட்டுகள்
தகவல் தொகுப்புகள்

**96 பக்கங்கள் விலை 75 காசு**

பாஞ்சாலங்குறிச்சியில்

# வீரபாண்டிய கட்டபொம்மன் விழா



இரவில் வண்ண மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட கட்டபொம்மன் நினைவுக் கோட்டையின் ஒரு தோற்றம்.

இந்தியச் சுதந்திரப் போரை முதன் முதலில் தொடங்கி வைத்தவன்!

முதன் முதலில் ஆங்கிலேய ஆதிக்கத்தை எதிர்த்துப் போர் தொடங்கியவன்!

அவன்தான் திருநெல்வேலிச் சீமை தந்த பாஞ்சாலஞ்குறிச்சியை ஆண்ட வீரபாண்டிய கட்டபொம்மன்!

அந்த விடுதலை வீரனை நினைவுகூரும் வகையில், வீரபாண்டிய கட்டபொம்மன்விழா 1984 மே திங்கள் 11, 12 ஆகிய இருநாட்கள் பாஞ்சாலங்குறிச்சியில் மிகச் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. செய்தி-மக்கள் தொடர்புத்துறை இந்த விழாவுக்கு ஏற்பாடு செய்திருந்தது.



மாண்புமிகு சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் திரு எஸ். என். இராசேந்திரன் அவர்கள் பேசுகிறார்.

விழாவினையொட்டி, பாஞ்சாலங்குறிச்சி வண்ண மின் விளக்குளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. பாஞ்சாலங்குறிச்சியை நோக்கிப் போகும் வளைவுகளும், நினைவுக் கோட்டையும், மதிற் சுவர்களும் மின்விளக்குகளால் ஜெகஜ்ஜோதியாய்க் காட்சியளித்தன. விழாவைக்காண ஆயிரக்கணக்கான மக்கள்ஆடவர் பெண்டிர், குழந்தைகள் எனை மாட்டுவண்டிகளிலும், லாரிகளிலும், பேருந்துகளிலும் வந்த வண்ணமிருந்தனர். அவர்கள் குழுக்குழுவாக ஆங்காங்கே கூடி ஆடல், பாடல், தெருக்கூத்துகள் நடத்தி மக்களை மகிழ்வித்தனர்.



மாட்டு வண்டிப் போட்டி.

11.5.'84 அன்று அலங்கரிக்கப்பட்ட பிரம்மாண்டமான பந்தலில் விழா தொடங்கியது.

சட்டமன்ற உறுப்பினர் திரு ஆர்.கே. பெருமாள் அனைவரையும் வரவேற்றார்.



மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ.சிவஞானம் அவர்கள், கட்டபொம்மன் திருவுருவப்படத்தைத் திறந்து வைக்கிறார்.



முன்னிலை வகித்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு க. சுப்பு பேசுகையில், ''கட்டபொம்மனுக்கு மட்டுமல்லாமல், விடுதலை இயக்கத்துக்காகப் பாடுபட்ட வீரர்களை நினைந்து போற்றவும் அரசு ஏற்பாடுகள் செய்து வருகின்றது'' என்றார்.

மாண்புமிகு சுற்றுப்புறச்சூழல் கட்டுப்பாட்டுத்துறை அமைச்சர் திரு எஸ்.என்.இராசேந்திரன் அவர்கள் விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில், ''1857ல் தான் சுதந்திரம் வேண்டும் என்று உரிமைக்குரல் எழுப்பியதாகச் சொல்வார்கள். ஆனால், அதற்கு முன்பே 200, 300 ஆண்டுகளுக்கு முன்பே முதன் முதலில் வெள்ளையனை எதிர்த்துக் குரல் கொடுத்தவன் நமது மாவட்டத்தைச் சேர்ந்த வீரபாண்டியகட்டபொம்மன். முதன் முதலில் விடுதலை உணர்வை ஏற்படுத்தியது தமிழ்நாடுதான்-நெல்லை மாவட்டம்தான் - பாஞ்சாலங்குறிச்சிதான். அன்றைக்கே கட்டபொம்மன் மக்களிடையே சுதந்திர உணர்வை ஏற்படுத்தி, சொன்னது போல் செயலாலும் செய்து காட்டினான்'' என்றார்.

தூத்துக்குடி திரு இரா. கிருஷ்ணன் விழாவில் கலந்துகொண்டு பேசினார். செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு நா. கிருஷ்ணபாரதி இ.ஆ.ப. அவர்கள் நன்றி கூறினார். விழாவில், கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தினரின் 'இளையவள் திருமணம்' என்ற நகைச்சுவை நாடகம் நடந்தது. அதன் பிறகு 'வீரபாண்டிய கட்டபொம்மன்' என்ற நாடகமும் நடந்தது.

இரண்டாம் நாள் 12.5.84 அன்று காலை, விழாவையொட்டி மாட்டுவண்டிப் போட்டிகள் நடந்தன.

அன்று பிற்பகல் 3 மணிக்கு நடந்த சிவகாசி ஈஸ்வரி, ராணி, காந்திமதி குழுவினரின் வில்லுப் பாட்டு நிகழ்ச்சி அனைவரையும் கவர்ந்தது.

பிறகு, கருத்தரங்கு, மாண்புமிகு தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி திரு ஜி.ஆர்.எட்மண்ட் அவர்கள் தலைமையில் நடந்தது. அப்போது அவர் பேசுகையில், ''சுதந்திரத்திற்காகப் போராடிய தியாகிகளை, சகோதரர்களை மறக்கவில்லை என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக இந்த விழா நடக்கிறது. பாரதியார், வ.உ. சிதம்பரனார் சுதந்திரத்துக்காகத் தங்களை ஈடுபடுத்திக்கொண்டவர்கள். இவ்வாறு விடுதலையில் ஈடுபட்ட சரித்திரம் படைத்த சரித்திர நாயகர்களை மறவாமல் அரசு, அவர்களுக்கெல்லாம் விழாக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது'' என்றார்.

கருத்தரங்கில் பங்குகொண்டு டாக்டர் சு.பாலசந்திரன் (கட்டபொம்மன்-விடுதலை வீரன்), திரு வளன்அரசு (கட்டபொம்மன் மாவீரன்), திரு பொ.மா. ராஜாமணி(கட்டபொம்மன் – மக்கள் தொண்டன்). திரு தி.சு.ஆறுமுகம் (கட்டபொம்மன் – மன்னன்) ஆகியோர் மிகச்சிறப்பாக உரை நிகழ்த்தி, மக்களை வெகுவாகக் கவர்ந்தார்கள்.

தொடக்கத்தில், செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு. பா.ஜெயப்பிரகாஷ் அனைவரையும் வரவேற்றார்.

தமிழ்நாடு கிராமத் தொழில் வாரியத்தின் சார்பில், 'கிராமிய நூற்புநிலையம்' ஒன்றை மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் திறந்துவைத்தார். ரூ 3½ இலட்சம் செலவில்தற்போது 30 பேருக்குவேலை வாய்ப்பளிக்கும் இத்திட்டம், படிப்படியாக 200 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும்.



நாடகத்தில் ஒரு காட்சி.

பிறகு மாலையில் நிறைவு விழா நிகழ்ச்சிகள் தொடங்கின.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு க.சுப்பு அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், ''வீரபாண்டிய கட்டபொம்மனைப் பற்றிய வரலாறு, தெருக்கூத்து, பாடல்கள் எல்லாம் எழுச்சி மிக்கவையாகும். பாஞ்சாலங்குறிச்சியை இந்தியாவின் 'ஜிப்ரால்டர்' என்று வெள்ளையர் குறிப்பிட்டார்கள். உள்ளத்திலே கட்டப்பட்ட உருக்குக் கோட்டையாக இந்தப் பாஞ்சாலம் விளங்குகிறது'' என்று குறிப்பிட்டார்.



**மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் பேருரையாற்றுகிறார்.**

விடுதலை வீரர்கள் சார்பில் வரவேற்புரை நிகழ்த்திய, சுதந்திரப் போராட்ட வீரர்கள் சங்கத் தலைவர் திரு எஸ்.என். சோமயாஜுலு அவர்கள், ''தமிழர் சரித்திரத்திலே ஒரு வீர பரம்பரையை உண்டாக்கினான் கட்டபொம்மன். தன்னந்தனியனாக நின்று வெள்ளையரை விரட்டியடித்து தூக்கிலேற்றப்பட்டான். இந்த விழாவை நடத்துகிறவர்களுக்குப் பாராட்டுச் செலுத்த வேண்டும்'' என்றார்.

வீரபாண்டிய கட்டபொம்மன் திருஉருவப்படத்தைத் திறந்து வைத்து, மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்கள் பேசுகையில், ''சுதந்திரக்கொடி பிடித்த முதல் வீரன் — ஆங்கிலேயனின் பீரங்கியை முதலில் சந்தித்த மாவீரன் வீரபாண்டிய கட்டபொம்மன். கட்டபொம்மனிடம் அமைச்சராக இருந்த தானாபதி பிள்ளையின் நினைவாக ஒரு ஸ்தூபியை நிர்மாணிக்க வேண்டும். தானாபதிப் பிள்ளையின் தலையை பிரிட்டிஷார் துண்டித்து எடுத்து ஓட்டப்பிடாரத்தில் ஒரு பொது இடத்தில் தொங்கவிட்டனர். அங்குதான் அவருக்கு நினைவுத்தூண் நிர்மாணிக்கப்படவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.

சட்டமன்ற உறுப்பினர் திரு. அப்பாதுரை பேசுகையில், ''வரலாற்றுப் பெருமைகளை—உண்மைகளைப் பெற்ற மண் இது'' என்றார்.

திரு கூத்தக்குடி சண்முகம் அவர்கள் பேசுகையில், ''திராவிட மக்கள் எல்லாரும் ஒன்று என்று இந்த விழாவில் சபதமேற்க வேண்டும்'' என்றார்.

**'கட்டபொம்மனும் உண்மை நிகழ்ச்சிகளும்' என்னும் நூலை மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் வெளியிட, மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் அவர்கள் பெற்றுக்கொள்கிறார், செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் அவர்கள் உடன் உள்ளார்.**




சட்டமன்ற உறுப்பினர் திரு ஆர்.கே.பெருமாள் பேசுகையில், ''இந்தப் பகுதியை முன்னேற்ற வேண்டும் - மேம்படுத்த வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

விழாவிற்குத் தலைமை வகித்த மாண்புமிகு செய்தி -அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள், மாட்டுவண்டி போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கியும், 'கட்டபொம்மனும் உண்மை நிகழ்ச்சிகளும்' என்ற நூலை வெளியிட்டும் பேருரை நிகழ்த்தினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''இந்தியாவினுடைய விடுதலை வரலாற்றில் வெள்ளைக்காரனை எதிர்த்துப் போர் முழக்கம் செய்து, ஒரு விடுதலை வீரர்களுக்கு முன்னோடியாக நின்ற வீரபாண்டிய கட்டபொம்மன் வாழ்ந்த இந்த மண்ணில், அவர் ஆட்சி செலுத்திய இந்த மண்

ணில், இன்றைக்குச் சுமார் 185 ஆண்டுகளுக்குப் பிறகும் அவனை நினைவுகூரவும் அவனுக்கு வணக்கம் செலுத்தவும், அவனோடு தோளோடு தோள் நின்று தன்னுடைய உயிரைத் திரணமாக மதித்து இந்த நாட்டினுடைய விடுதலைக்காக தன்மானத்துக்காக—வீரமிக்க வாழ்வுக்காக—உயிரைத் துறந்த அந்த வீரர்களையெல்லாம் வணங்கவும், இந்தச் சமுதாயம் இன்றைக்கு வாழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை நினைவுபடுத்துகிற வகையில் கடந்த 2 நாட்களாக நாம் இந்த விழாவை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

''விடுதலை மாவீரன் - முதல் முழக்கமிட்ட மாவீரன் இந்தியாவிலேயே எல்லா மாநிலங்களிலேயும் சிலை எழுப்பப்படவேண்டுமானால், நம்முடைய வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு டெல்லியிலேயும் சிலை எழுப்ப வேண்டும். மாநிலங்களுடைய தலைநகரத்திலேயும் சிலை எழுப்ப வேண்டும். இந்தியாவில் முதல் விடுதலை முழக்கத்தை எழுப்பியவன் யார்? அதை இந்திய மக்கள் தெரிந்து கொள்ளவேண்டும். டெல்லி நகரத்திலே இருக்கிறவர்கள்- தலைநகரத்திலே வாழ்கிறவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இந்த நாட்டிலே இருக்கிற மாநிலங்களின் தலைநகரங்களிலே வாழ்கிறவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

''இன்றைக்குப் புரட்சித்தலைவர் அவர்கள், வீரபாண்டிய கட்ட பொம்மனை நினைவுகூருகிறார்கள். அதோடு நிறுத்திவிடவில்லை. இந்தப் பகுதியிலே இருக்கின்ற நம்முடைய கப்பலோட்டிய தமிழனுக்கு உறுதுணையாக இருந்த நம்முடைய வீரன் வாஞ்சி, அவனுக்கும் செங்கோட்டையிலே சிலை எழுப்ப இருக்கிறார்கள். சிலை உருவாகிக்கொண்டிருக்கிறது. அது மாத்திரமல்ல, இந்தத் தென்பாண்டி மண்டலத்தில் வெள்ளைக்காரனை எதிர்ப்பதற்குக் கட்டபொம்மனோடு மறைந்து விடவில்லை. அதற்குப் பிறகும் தமிழன் எழுந்து நிற்கிறான் என்று வீரப்போர் புரிந்து மாண்டார்களே மருது சகோதரர்கள் அவர்களுக்கும் இன்றைக்கு நினைவுச் சின்னங்கள் வைக்கப்பட இருக்கின்றன. அதுமாத்திரமல்ல, இந்தப் பகுதியிலேயே இருந்து பிறந்து வளர்ந்து நம்முடைய தர்மபுரி மாவட்டம் என்று அழைக்கப்படுகிற பகுதியில், தன்



கட்டபொம்மன் நினைவுக் கோட்டையினுள், சிலை அருகில் மாண்புமிகு நாடாளுமன்றத் துணைத் தலைவர் திரு ஜி. லட்சுமணன் அவர்கள்.

னுடைய வாழ்க்கையை முடித்துக் கொண்டானே, அந்த வீரன் சிவா அவனுக்கும் இந்த ஆண்டு நூற்றாண்டு விழா வருகிறது. அந்த நூற்றாண்டையும் அரசு கொண்டாட வேண்டும் என்று புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

''ஒரு செய்தியை புரட்சித் தலைவர் அவர்கள் இங்கே அறிவிக்கச் சொல்லியிருக்கிறார்கள். அந்தச் செய்தி —

"1957ஆம் ஆண்டிலே தமிழக அரசு செய்யத் தவறிய அந்தப் பணியை - நம்முடைய வீரபாண்டிய கட்டபொம்மன் இங்கே வாளோடு நிற்கிறானே அப்படி நின்றால் மாத்திரம் போதாது, அவன் வீரனாகக் காட்சியளிக்க வேண்டும். கையிலே வாள் வைத்திருக்கிறவன் எல்லாம் வீரன் அல்ல. வாளைப் பறிகொடுத்த வீரர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். ஆனால் குதிரையிலே அமர்ந்திருக்கிற தோற்றத்தோடு மிகச் சிறந்த வீர உருவத்தோடு, ஒரு அற்புதமான சிலையை இன்றைக்கு வீரன் சிவாஜி என்றால், நம்முடைய கண் முன்னாலே தோற்றமளிக்கிறதே குதிரைமீதமர்ந்த அந்தத் திருஉருவம், வீரத்திருவுருவம் அது மராட்டியத்திற்கு மாத்திரம் சொந்தமல்ல, எங்களுடைய தமிழ் மண்ணிற்கும் சொந்தம் தான் என்று எடுத்துக்காட்டுகிற வகையில் நம்முடைய வீரபாண்டிய கட்டபொம்மனுடைய திருவுருவச் சிலையை, அவர் அற்புதமான வீரமிக்க குதிரை மீது அமர்ந்திருக்கிற அந்தத் தோற்றத்தோடு, தலைநகரத்திலே-தமிழ்நாட்டினுடைய தலைநகரத்திலே - சென்னை நகரத்திலே அரசின் சார்பிலே அந்த அற்புதமான வீரத் திருவுருவச் சிலை வைக்கப்பட இருக்கிறது என்கிற செய்தியை இந்த நேரத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த மண்ணிற்கு, இந்த மண்ணின் சொந்தக்காரர்களுக்கு - தமிழகத்திற்கு - தமிழகத்தின் மூலம் இந்தியத் துணைக் கண்டத்திற்கு செய்தியைத் தெரிவியுங்கள் என்று ஆணை பிறப்பித்திருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்."

விழா முடிவில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு என்.எஸ். ஹீரா இ.ஆ.ப. அவர்கள் நன்றி நவின்றார்.

பிறகு,சேரன் போக்குவரத்துக் கழகத்தினரின் மெல்லிசை நிகழ்ச்சியும் மற்றும் கிராமியக் கலை நிகழ்ச்சிகளும் நடந்தன.

மெல்லிசை நடந்து கொண்டிருந்தபோது,மாண்புமிகு நாடாளுமன்றத் துணைத் தலைவர் திரு ஜி.லட்சுமணன் அவர்கள் வந்து கலந்து கொண்டார். அப்போது முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு க. சுப்பு பேசுகையில்,'வீரபாண்டிய கட்டபொம்மன் திருவுருவ அஞ்சல் தலை வெளியிட ஆவன செய்ய வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

''அடுத்த ஆண்டு வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவாக அஞ்சல்தலை வெளியிடுவதற்கு வேண்டிய முயற்சிகள் செய்யப்படும்'' என்று உறுதி கூறினார் மாண்புமிகு நாடாளுமன்றத் துணைத் தலைவர்.

விடுதலை வீரர்களைப் பெற்றெடுத்த அந்த வீரமண்ணில்-பரங்கியரை வெருண்டோடச் செய்த பாஞ்சாலங்குறிச்சியில் இரண்டு நாட்களும் நடந்த இனிய விழா நம் இதயம் எல்லாம் கவர்ந்தது என்றால் அது மிகையல்ல!

**நிகழ்ச்சித் தொகுப்பு:**

**பி. வி. கிரி**

பெரியார் மாவட்டத்தில், சிறு குடும்பங்களின் முக்கியத்துவத்தைக் கிராமப் புறங்களில் உள்ள குடும்பத்தார் குறிப்பாகச் சிறிய மத்திய தர விவசாயக் குடும்பத்தார் நன்கு உணர்ந்துள்ளனர். இதற்குச்சிறந்தஉதாரணம்கோபி செட்டிப்பாளையம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அய்யம்புதூர் என்னும் கிராமம்.

இப்பகுதி மக்கள் தங்களுடைய நிலங்கள் மற்றும் இதர சொத்துக்கள் சிறுசிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டால், தங்கள் வாரிசுகளுக்கும், நாட்டிற்கும் நல்லது அல்ல என்பதை உணர்ந்து, தாங்களாகவே குடும்பத்தின் அளவைக் கட்டுப்படுத்தி வருவதன் மூலம் தங்களுடைய பொருளாதார நிலையைத் தக்க வைத்துக் கொண்டு நிம்மதியான வாழ்க்கை வாழ்வதற்குத் தாங்களே வழி வகுத்துக் கொண்டுள்ளனர்.

இந்தக் கிராமத்தின் மக்கள் தொகை 670 பேர்கள் மட்டுமே, சுமார் 130 குடும்பங்களாகவுள்ள இக்கிராம மக்கள் பல்வேறு வழிகளிலும் தன்னிறைவு பெற்று, நிம்மதியான வாழ்க்கை வாழ்கின்றனர். அதற்கு முழு முதற் காரணம் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம்தான். இந்தக் கிராமத்தில் உள்ள அனைவருமே ஒரு குழந்தை, மேலே போனால் இரண்டு குழந்தைகள் உடையவராகத்தான் இருக்கின்றார்கள். இரண்டு குழந்தைகளுக்கு மேல், மூன்று குழந்தைகள் உள்ள குடும்பங்கள் ஐந்தே ஐந்துதான் உள்ளன. அவர்களும் அருகிலுள்ள ஊர்களிலிருந்து வந்து இங்கே குடியேறியவர்கள்.

இந்தக் கிராமத்தில் பெரும்பாலும் விவசாயக் குடும்பங்களே அதிகம். ஒவ்வொரு குடும்பத்திலும் மகளின் திருமணத்திற்காக அதிகச்செலவு செய்ய வேண்டியுள்ளதாலும், சீர்வரிசைகள் அதிகமாகக் கொடுக்க வேண்டியுள்ளதாலும், அத்திருமணத்திற்குச் சொத்து முழுவதையும் விற்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. முதல் குழந்தை ஆணாகப் பிறந்தால் ஒன்றே போதும் என்று நிறுத்திக் கொள்கின்றனர். பெண் குழந்தை பிறந்தாலோ, அடுத்த குழந்தையாவது ஆணாகப் பிறக்க ஆவலோடு காத்திருக்கின்றனர். நினைத்தது போல் ஆணாகப் பிறந்தால், மகிழ்ச்சியடைந்து அத்துடன் குழந்தை பெறுவதை நிறுத்திக் கொள்கின்றனர். ஒரு வேளை இரண்டாவது குழந்தையும் பெண்ணாகப் பிறந்துவிட்டால், போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்தெனக் கருத்தடை செய்து கொள்கின்றனர்.

''எப்படிப் பார்த்தாலும் அதிக பட்சம் இரண்டிற்குப் பிறகு வேண்டாம் என்ற கருத்து எங்கள் கிராம மக்களிடையே ஒருமித்த கருத்தாக நிலவி வருகின்றது'' என்றார் அய்யம்புதூர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. ஏ.எம். கருப்பண்ண கவுண்டர்.

குழந்தைகள் ஆண்டவனின் வரப்பிரசாதம் என்று நினைக்கும் சாதாரண கிராம மக்களின் மனம் மாறிய காரணத்தையும், வழக்கமாகக் குடும்பக்கட்டுப்பாடு பற்றி அலட்சியலமாக இருக்கும் கிராம மக்களிடையே இந்த விழிப்புணர்ச்சி ஏற்பட்ட காரணத்தையும் ஆராய நேரடியாக அய்யம்புதூர் கிராமத்திற்குச் சென்ற பொழுது முதலில் சந்தித்த நபரான, பத்து ஏக்கருக்கு மேல் விவசாயம் செய்யும், வசதிகளுடன் மாடி வீட்டில் வாழும் திரு துரைராஜ், "ஏழு ஆண்டுகளுக்கு முன் எனது திருமணம் நடந்தது. ஒரே ஒரு ஆண் மகனைப் பெற்றெடுத்ததோடு அறுவைச் சிகிச்சை செய்து கொண்டேன்'' என்றார்.

# அய்யம்புதூர் வழிகாட்டுகிறது!



# எல்லோரும் விரும்பும் எகானமி மாடலுக்கு நிகராக இப்பொழுது ஒரு

# புதிய சாலிடெர் TS33E!

சாலிடெர் TS 32E, எல்லோரும் விரும்பி வாங்கும் ஜனதா மாடலாக திகழ்ந்தது. இதற்கு நிகராக இப்பொழுது தனிச் சிறப்பு வாய்ந்து, உங்கள் ரசனைக் கேற்ப எழிலான அமைப்பு கொண்ட சாலிடெர் TS 33E ஒரு அற்புத படைப்பு.

எளிதாக நகரக்கூடிய இரண்டு ஷட்டர்கள், பகட்டான பாலிஸ்டைரின் முகப்பு, நேர்த்தியான கன்ட்ரோல்கள் போன்ற சிறப்பான அம்சங்கள் அடங்கியது சாலிடெர் TS 33E.

அதுமட்டுமின்றி விஷன் இன்டர்மீடியட் ஃபிரிகுவன்ஸியில் (VIF) கண்டுள்ள முன்னேற்றத் தினால் செய்தி வாசிப்பவரின் கண் இமைகள் கூட துல்லியமாக தெரியும் படத்தோற்றம். படம் மேலும் கீழுமாக ஓடாமலிருக்க பிரத்யேக ஆட்டோமாடிக் 'ஒலி தடுப்பு' அமைப்பு.

மேலும் இதிலுள்ள 4 வாட் ஆம்ப்ளிஃபையர் வெகு சீரான ஒலியை அளிக்கிறது. தொலைதூர இடங் களுக்கென இதில் கூடுதலாக ஒரு ஹை-கெய்ன் ஆன்டெனு அமைப்பு பொருத்தப் பட்டுள்ளது. விசிஆர், டேப்ரெக்கார்டர் போன்றவற்றுக்கு பிரத்யேக அமைப்பு உள்ளது.

இத்தகைய முற்போக்கான அம்சங்களை மிக சிக்கன மாக உங்களுக்கு அளிக்கிறது TS 33E. எப்பொழு தாவது சர்வீஸ் வசதி தேவைப்பட்டால் உடனடி யான பராமரிப்பு உண்டு.

**ரூ. 325 மிச்சம்**
**உள்ளடங்கிய வோல்டேஜ் ஸ்டெபிலைஸர்**



# சாலிடெர்

-தொல்லையில்லாத் தொலைக்காட்சி

HE 8608

DIPR/216/84/61 ASP



காரணம் கேட்ட பொழுது, ''என் தந்தைக்கு 20 ஏக்கர் நிலம் உள்ளது.எங்கள் தந்தைக்கு நாங்கள் இருபிள்ளைகள். பிற்காலத்தில் பாகப் பிரிவினையில் 10 ஏக்கர் நிலம் மட்டுமேதான் கிடைக்கும். அந்தப் பத்து ஏக்கரும் சிதறுண்டு போகாமல் இருக்க ஒரே குழந்தையுடன் நிறுத்திக் கொண்டேன்; இதில் என்மனைவி கண்ணகிக்கும் பூரண சம்மதம் தான்'' என்றார் அவர்.

அய்யம்புதூர் கிராமத்தில் பெரும்பாலோருக்கு அடிப்படைக் கல்வி இருக்கின்றது. ஒருவர் எம்.இ. படித்துவிட்டு,அமெரிக்காவில் பொறியாளராகப் பணியாற்றுகின்றார். மற்றும் ஒருவர் எம்.எஸ்சியும், ஒருவர் எம்.இயும் சென்னையில் படித்து வருகின்றனர்.

அடுத்து வயலில் வேலைசெய்து கொண்டிருந்த கருப்பண்ணன் என்ற 83 வயதுடைய ஐந்து ஏக்கர் சொந்த நிலமுள்ள நடுத்தர விவசாயியினைச் சந்தித்தபோது அவர் இப்படிச் சொன்னார்;

''எனக்குத் திருமணம் ஆகி 13 வருஷமாவுது. என் மனைவி பெயர் ஈஸ்வரி. நான் முழுமையான விவசாயிங்க. எனக்கு கோவிந்தராஜ் என்ற 10 வயசுல ஒரு பையன் இருக்கான். ரெண்டாவது குழந்தை வேண்டாம்னு நானும் என் மனைவியும் மனமொத்து கருத்தடை செய்து கொண்டோம்''

21 வயது நிரம்பிய சலவைத் தொழிலாளி செல்வனைப் பார்த்தபோது கிடைத்த செய்தி இது; செல்வனுக்குத் திருமணமாகி இரண்டு வருடங்கள் ஆகிறது. இரண்டு வருடத்தில் இரண்டு குழந்தைகளைப் பெற்றெடுத்தவுடன், ஊரில் உள்ள மற்றவர்களைப்போல் தாமும் அளவான குடும்பத்துடன் வாழவேண்டும் என்று எண்ணி அய்யம்புதூருக்கு ஐந்தாவது கிலோமீட்டரில் உள்ள சிறுவலூர் ஆரம்பச் சுகாதார நிலையத்தை அணுகி அறுவைச் சிகிச்சை செய்து கொண்டிருக்கிறார்கள்.கிடைக்கும் வருமானத்தில் மகிழ்ச்சியான வாழ்க்கை நடத்த இரண்டே போதும்'' என்றார் செல்வனும் அவன் மனைவி சிந்தாமணியும்.

56 வயது நிரம்பிய, 10 ஏக்கர் நிலமுடைய திரு நஞ்சப்பக் கவுண்டரும் ''எனக்கு ஒரேமகன் நடராஜன்கிற அவனுக்கு வயது 25 "என்று கூறினார்.

''ஏன் அடுத்த குழந்தை பெற்றுக் கொள்ளவில்லையா?'' என்று அவரது மனைவி கருப்பாயம்மாளைக் கேட்டோம்; ''ஒரு பிள்ளையே போதுங்க, இருக்கும் சொத்தை வைத்துக் கொண்டு அவன் மகிழ்ச்சியாக இருந்தாலே அதுவே எங்களுக்கு நிம்மதிங்க. எனவே, சுய கட்டுப்பாட்டுடன் நிறுத்திக் கொண்டோம்'' என்றார்.

50 வயதுள்ள விவசாயக் கூலித் தொழிலாளி தி.மாரிமுத்துவும் ''எனக்கு ஒரே ஒரு மகன் உள்ளான். அதற்குமேல் நாங்கள் பிள்ளை பெற்றுக் கொள்ளவில்லை என்றார். ''என்ன காரணம்'' என்று கேட்டபொழுது- ''எங்கள் ஊரில் சொந்த நிலம் உள்ளவர்களே ஒரு குழந்தைக்கு மேல் பெறுவதில்லை;நாங்களோ கூலிவேலைசெய்பவர்கள்.எனவே இருக்கிற ஒரு குழந்தையை நல்ல முறையில் வளர்த்தாலே போதும்னு குழந்தை பெறுவதை நிறுத்திக் கொண்டோம்'' என்றார்கள் அவரும் அவரது மனைவியும்.

130 வீடுகளைக் கொண்டுள்ள சிறிய கிராமமாக இருந்தாலும், 171 உறுப்பினர்களடங்கிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் நல்ல முறையில் இக்கிராமத்தில் செயல்பட்டு வருகின்றது. அனைவரும், கறவை மாடுகள் வைத்துப் பால் கறப்பதன் மூலம் நாள் ஒன்றிற்கு 600 லிட்டர் பால் இச் சங்கத்தால் சேகரிக்கப்பட்டு வெளியூர்களுக்கு அனுப்பப்படுவதால் நல்ல வருமானத்தைப் பெறுகின்றனர் என்று சங்கச் செயலாளர் திரு ஏ.சி.நஞ்சப்பன் தெரிவித்தார்.

மேலும்,இக்கிராமத்தில் உள்ள அனைத்து வீடுகளும் மின்னொளி பெற்றுள்ளன. கிராமத்தில் கட்டப்பட்டுள்ள பொது குடிநீர்த் தொட்டி மூலம் பொது குடிநீர்க் குழாய்கள் 30 வீடுகளுக்கு இணைப்புத் தரப்பட்டுள்ளது. இங்குள்ள பத்து வீடுகளில் அரசின் மானியம் மற்றும் கடன் பெற்று சாண எரிவாயு அடுப்புகள் அமைத்துப் பயன்படுத்தி வருகின்றனர்.

இவ்வூரில் நெல் அரவை மில் ஒன்றும், ஒரு சிறிய மளிகைக் கடையும் உள்ளன. இங்குள்ள ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளிக்குக் கிராமத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் ரூ. 80,000 செலவில் புதிய கட்டடம் ஒன்று கட்டித் தரப்பட்டுள்ளது.

இப்படிப் பல்வேறு வசதிகளையும் பெற்று, குடும்ப நலத் திட்டத்தை, இயற்கையான முறையிலும், செயற்கையான முறையிலும் கையாள்வதன் மூலம், இக்கிராம மக்கள் அனைவரும் மகிழ்வுடன் வாழ்க்கை நடத்தி வருகின்றனர். எடுத்துக் காட்டாக, ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் ஒன்று அல்லது இரண்டு சைக்கிள்கள் வைத்துள்ளனர். மேலும் இக்கிராமத்தில் 15 மோட்டார் சைக்கிள்கள் உள்ளன. ஆனாலும் இவ்வூருக்கு கோபியிலிருந்து 10ஏ, 10பி என்ற இரண்டு நகரப்பேருந்துகள் வந்து செல்கின்றன. இவ்வூரில் சண்டை சச்சரவுகள் ஏற்பட்டால் தங்களுக்குள்ளாகவே பேசித் தீர்த்துக்கொள்கின்றனர். வழக்கு மன்றம் வரை போவதுமில்லை, வெளியூரார் தலையிடுவதுமில்லை.

இவ்வூரில் நடைமுறையில் உள்ள குடும்பக்கட்டுப்பாடுத்திட்டத்தை உணர்ந்த, அருகிலுள்ள வேப்பம்பாளையம், முள்ளங்கரை, காவேரிப்பாளையம், சின்னக்கொரவம்பாளையம், குள்ளம்பாளையம் போன்ற கிராம மக்களும் தற்பொழுது தங்களிடையே குடும்பக் கட்டுப்பாட்டைத் தீவிரமாகக் கடைப்பிடிக்கத்தொடங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது.

அண்மையில் அய்யம்புதூருக்கு வருகைதந்த அரசு இரண்டாவது செயலாளர் திருடி.வி. அந்தோணி அவர்கள், இங்குள்ள மக்களின் கட்டுப்பாடான குடும்ப நிலைகண்டு வியந்து பாராட்டினார்.

அய்யம்புதூர்-வினாயகக் குடும்பத்தைப் பெருக்கிக் கொண்டு எதிர்காலத்தில் அவதிப்படும் அய்யம் இல்லாத ஊராகத் திகழ்வது விந்தையிலும் விந்தையே!

—தில்லை

அனைத்து சாலைகளும் அஞ்சலகத்தை நோக்கியே!

# உங்கள் பணத்தை 6 ஆண்டுகளில் இரட்டிப்பாக்குங்கள்

## தேசீய சேமிப்புப் பத்திரம்

### 6-வது வெளியீட்டில் முதலீடு செய்யுங்கள்



ஒவ்வொரு
ரூ.100/-ம்
ரூ.201-50
ஆக
பெருகுகிறது

உங்கள் பணத்திற்கு நல்ல வட்டியும் பாதுகாப்பும் அளிக்கிறது. இப்பத்திரம் ரூ.10, 50, 100, 500, 1000, 5000 மதிப்பில் கிடைக்கும். முதலுக்கும், வட்டிக்கும் வருமான வரி சலுகை உண்டு!

அயல் நாட்டில் வாழும் இந்தியர்களுக்கு 13% வட்டி அளிக்கிறோம்!



தொடர்பு கொள்க :
இயக்குநர்,
**சிறு சேமிப்புத் துறை,**
143, அண்ணா சாலை, சென்னை-600 002
**அல்லது அருகிலுள்ள அஞ்சலகங்கள்.**

DIPR-509/83-EP





# சித்தோடு பால் பண்ணை

நாள் ஒன்றுக்கு ஒன்றரை லட்சம் லிட்டருக்குமேல் பால் சேகரித்து விநியோகிக்கப்படும் இந்த பால் பண்ணை 65 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது. இங்கே 300 பேர் வேலை பார்த்து வருகின்றனர். வெண்ணெய், நெய், ஆகியவற்றுடன் பால் பவுடரும் இங்கு தயாரிக்கப்பட்டு வருகிறது.

பெரியார் மாவட்டத்தில் 434 பால் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவைகளில் 2 ஆதிதிராவிடர்களே அங்கம் வகிப்பவைகளாகும். இதில் 500 லிட்டருக்கு மேல் பால் தரும் சங்கங்களும் உண்டு.



தமிழ்நாட்டிலேயே அதிகப் பால் வழங்கும் மாவட்டமாக விளங்குகிறது பெரியார் மாவட்டம். மாண்புமிகு முதல்வர் அவர்களால், பெரியார் மாவட்டம், சித்தோட்டில் 1981ல் திறக்கப்பட்ட இந்தப் பால்பண்ணைக்குச் சட்ட மன்ற உறுப்பினர் கே.ஏ.செங்கோட்டையன் தலைவராக இருக்கிறார். திரு. இரா. விஜயகுமார் இ.ஆ.ப., பொது மேலாளர்.





கழிவுநீரைப் பயன்படுத்துதல்



சத்தியமங்கலத்தில் ஒன்றும், சங்கராந்தம்பாளையத்தில்ஒன்றுமாகப் பால் குளிரூட்டும் மையங்கள் 2 இம் மாவட்டத்தில் இருக்கின்றன.

இங்கு சேகரிக்கப்படுகிற பால், 28 லாரிகளின் மூலமும் அன்றாடம் ரயில்வாகன் மூலமும் ஊட்டி, கோவை, சேலம், திருச்சி, சென்னை வரை பயணம்போகின்றது.

அண்மையில் ரூ.40 லட்சம் திட்ட மதிப்பீட்டில் இங்கு ஒரு உறை விந்து சேகரிப்பு நிலையம் துவக்கப்பட்டுள்ளது. ஜெர்ஸி, முர்ரா இன விந்துகள் இங்கே பாதுகாக்கப்படுகின்றன.






சித்தோடு பால் பண்ணையில், கால்நடைகளைக் கவனிக்கத் தனி மருத்துவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வாரம் ஒருநாள் ஒவ்வொரு பால் கூட்டுறவுச் சங்கத்திற்கும் சென்று அங்குள்ள கால்நடைகளைப் பரிசோதிப்பார்கள். அவசரமாகக் கால்நடைகளுக்கு ஏதேனும் விபத்தோ, நோயோ என்றால் தொலைபேசியில் தொடர்புகொண்டாலேபோதும்; அடுத்த இரண்டு மணி நேரத்தில் அங்கே மருத்துவர் போய் நிற்பார். அப்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மருத்துவம் இலவசம்.

இங்குள்ள செயற்கை முறைக் கருத்தரிப்பு நிலையத்தின் மூலம் ஜெர்ஸி, முர்ரா இன விந்துகள் தரப்படுகின்றன.

மாடுகளுக்கு வலிவூட்டுகிற பால்வளம் பெருகச் செய்கிற கொழுக்கட்டைப்புல், பால்பண்ணைக்குச் சொந்தமான நிலத்திலேயே விளைவிக்கப்படுகிறது. கூட்டுறவுச்சங்கங்களுக்கு 'கோ.1' என்ற இந்தப் புல்லும், விதை நாற்றும் தந்து வருகிறார்கள்.

26 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் பங்கு முதலீட்டுடன் 1976ஜூலைத்திங்களில் தொடங்கப்பட்ட இந்தப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் பெரியார் மாவட்டத்தில் சிறந்த முறையில்பணி ஆற்றிவருகிறது.

பல்வேறு தொழில் மையங்களில், இயந்திரங்களை இயக்கப் பயன்படும் நீர், கெட்டுக் கழிவு நீரானதும் அதை எங்காவது அருகில் உள்ள ஆற்றில் வாய்க்கால் மூலம் கொண்டுபோய்க் கலக்கவிடுவதுண்டு. ஆனால் இங்கோ, அந்தக் கழிவுநீரை மறுபடியும் சுத்திகரிப்புச் செய்து, மீண்டும் இயந்திரப் பணிகளுக்காகப் பயன்படச் செய்கிற அதிசயத்தையும் நிகழ்த்துகிறார்கள்!



பொது மேலாளர்








# பட்டுத் தொழில்



பெரியார் மாவட்டத்தில் பட்டுத் தொழில் பெரிதும் வளர்ச்சியுற்றிருக்கிறது. குறிப்பாகச் சத்தியமங்கலம் வட்டத்திலுள்ள தாளவாடி பகுதியில் இத்தொழிலில் பெரும்பான்மை மக்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

ஈரோடு சரகத்திலும் பட்டுத் தொழில் பாங்குற்றிருக்கிறது; என்றாலும், கடல் மட்டத்திலிருந்து 2600 அடிக்குமேல் உள்ள தாளவாடியே மேம்பட்டுத் திகழ்கிறது. 600 மில்லி மீட்டரிலிருந்து 800 மில்லி மீட்டர் வரை மழை அளவுள்ள இங்கத்திய தட்ப வெப்பநிலை பட்டுப் புழு வளர்க்கவும் முசுக்கொட்டைச் செடி பயிரிடவும் மிகவும் ஏற்றதாக உள்ளது.

ஆசனூரிலும் கேர்மாளத்திலும் மாதிரிப் பட்டுப் பண்ணைகள் 2 இருக்கின்றன. தொட்டபுரம், ராமாபுரம் ஆகிய இடங்களில் புழு வளர்ப்பு மனை இல்லாதவர்கள் தங்கள் புழுக்களை வளர்க்க சமுதாயப் புழுவளர்ப்பு இல்லங்கள் 2ம் அரசால் அமைக்கப்பட்டுள்ளன.

1968-69ல், இங்கு நிறுவப்பட்ட ஒரு விதை உற்பத்தி வித்தகத்தின் மூலம் கடந்த ஆண்டுகளில் 5 இலட்சத்திற்குமேல் முட்டைத் தொகுதிகள் உற்பத்தி செய்யப்பட்டு இப்பகுதி மக்களுக்கு விநியோகிக்கப்பட்டிருக்கிறது. புதிய வகை முசுக்கொட்டைச்செடி நாற்றங்கால், பட்டுக்கூடு அங்காடி, நூற்பு நிலையம் எல்லாம் இங்கிருக்கிறது.

நாற்றங்கால் பண்ணை, முட்டை உற்பத்தி வித்தகம், பட்டுக் கூடு அங்காடி, பட்டுநூற்பு நிலையம், மாதிரிப் பட்டுப் பண்ணைகள் 2, இளம்புழு வளர்ப்பு நிலையம், சமுதாயப் புழு வளர்ப்பு மனைகள் 2 ஆகியவைகளும் இங்குண்டு.

''தாளவாடி பகுதியிலே மட்டும் 5,500 ஏக்கர் நிலத்தில் முசுக்கட்டை செடி பயிரிடப்பட்டு வருகிறது! தாளவாடி, அரளவாடி, சரளவாடி, சிம்டஹள்ளி, தொட்டபுரம், கேர்மாளம், ஆசனூர், குத்தியாலத்தூர் ஆகிய பகுதிகளிலே மட்டும் 1675 பேர் மல்பரி பயிரிட்டிருக்கிறார்கள்'' என்றார் பட்டு வளர்ப்புத்துறை உதவி இயக்குநரான திரு ஒய். எம். சுப்பிரமணியம்.

பட்டுத் தொழிலில் ஈடுபடுவோர்க்கு முசுக்கட்டைச்செடி பயிரிடத் தகுந்த பயிற்சியும் அளித்து வருகிறார்கள் இங்கே. இத் தொழிலில் ஈடுபடுவோர்க்குக் கடன் வசதியும் உண்டு.

தனிக் கட்டடத்தில், தாளவாடியில் பட்டு நூற்பு நிலையம் ஒன்று அண்மையில் அமைக்கப்பட்டு, அங்குள்ள 6 புதுவகைத் தறிகளிலே 50 பேர்களுக்கு மேல் பணியாற்றி வருகிறார்கள்

-ராஜா






# சென்னையில் குடியரசுத் தலைவர் பிறந்த நாள் விழா

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு கியானி ஜெயில் சிங் அவர்களின் 69வது பிறந்த நாள் விழாவை, சென்னை இராயப்பேட்டையிலுள்ள பஞ்சாப் சங்கம் 5.5.'84 அன்று சிறப்பாகக் கொண்டாடியது.

சென்னை ஷெரீப் திருமதி சரோஜினி வரதப்பன் அவர்கள் விழாவுக்குத் தலைமை வகித்து, குடியரசுத் தலைவரின் சிறப்பியல்புகளை எடுத்துக் கூறினார்.

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். அப்போது அவர் பேசுகையில் குறிப்பிட்டார்:

''இந்திய முதல் குடிமகன் கியானி ஜெயில்சிங் அவர்களின் பிறந்த நாள் விழாவில், தமிழக அரசின் சார்பிலும், மக்களின் சார்பிலும் கலந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்திய நாட்டின் மிகச்சிறந்த பதவி வகித்து வரும் பெருமகன், பஞ்சாப் மாநிலத்தில் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்து, அந்த மாநிலத்தின் முதல்வராகப் பொறுப்பேற்று, அந்த மாநில வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டவர்.

''அன்னாரின் பிறந்த நாளை பஞ்சாப் சங்கம் கொண்டாடினாலும், தமிழக மக்கள் சார்பில் கொண்டாடப் படுவதாகவே கருதுகிறேன். ஏனெனில், இந்த விழாவில் பங்கு கொள்ள வந்துள்ள பெரியவர்கள் பல்வேறு சமயத்தைச் சார்ந்தவர்களாக, பல்வேறு அமைப்புகளைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள். எனவே இந்த விழாவை ஒரு மாநில மக்கள் கொண்டாடுவதாக நான் எண்ணுகிறேன். 68 வயது முடிந்து 69வது வயதில் அடி எடுத்து வைக்கும் இந்தியக் குடியரசுத் தலைவரின் இந்தப் பிறந்த நாளில், இந்தியாவின் 60 கோடி மக்களின் வாழ்த்துக்களையும் அவர் பெறுகிறார். தமிழக மக்களின் நல்வாழ்த்துக்களையும் பெறுகிறார்.

''ஏழை எளிய மக்களுக்கு அவருடைய பணி என்றும் நிலைத்து நிற்க வேண்டும் என்று அவரை வாழ்த்தக் கடமைப்பட்டுள்ளேன்.

''பஞ்சாப் சங்கம் என்றாலே, எப்படி ஒருங்கிணைந்து வாழ வேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டாய் விளங்கும் சங்கம் என்று கூறலாம். இது, எந்தச் சமயம் என்று பாராமல் தமிழக மக்களுக்குத் தொண்டாற்றி வருகிறது. இந்தச் சங்கம் 62 அமைப்புகளை உருவாக்கி, குறிப்பாகப் பெண்கள் முன்னேற்றத்துக்கு, ஆதரவற்ற, சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டவர்களுக்குப் பல்வேறு திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றி வருகின்ற பாங்கினைப் பார்க்கின்றபோது, பல அமைப்புகளும் இதேபோலச் செயல்பட்டால், இந்தியாவை உலுக்கிக் கொண்டிருக்கிற சூழ்நிலைகள் பஞ்சாப், அசாம் போன்ற மாநிலங்களில் நடக்கின்ற அசம்பாவிதங்கள் உருவாமல் இருக்குமே என்று குறிப்பிட விரும்புகிறேன்.

''இந்தியக் குடியரசுத் தலைவரின் பிறந்த நாளை இந்தியா முழுக்கக்கொண்டாட வேண்டும். அதற்குத் தமிழகம் முன்னுதாரணமாகத் திகழ்கிறது. பஞ்சாப் சங்கம் அதற்கு வழிகாட்டியிருக்கிறது''.

விழாவில் இந்தியக் குடியரசுத் தலைவரின் குணநலன்களை, நற்பணிகளை விளக்கிப் பல அமைப்புகளைச் .சேர்ந்த பெரியவர்கள் பேசினார்கள்.

சென்னை அருள்தந்தை ரெவரெண்ட் டாக்டர் ஆர். அருளப்பா, டாக்டர் ராம்சிங், திரு கேசவதாஸ், ஜெ.ஜெஷானி, திருமதி நூர்ஜகான் காதிர், திரு ஷோபாகாந்த் தாஸ், திரு காந்திலால் சங்க்வி, திரு சுதிர் கந்தோத்ரா, திரு சி.ஐ.பெருமாள், திரு சர்தார் குல்வந்த்சிங் விர்தி ஆகியோர் பேசினர்.

விழாத் தொடக்கத்தில், பஞ்சாப் சங்கத் தலைவர் திரு பல்தேவ்ஜி, பொதுச் செயலாளர் பத்மஸ்ரீ திரு பி.என்.தாவன் ஆகியோர் பேசினர். விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக, சைதாப்பேட்டையிலுள்ள வெங்கட்டாபுரம் ஆதிதிராவிடக் காலனியைச் சேர்ந்த ஆடவர், பெண்டிர், குழந்தைகள் கலந்து கொண்டார்கள். மேடையில் மேதகு குடியரசுத் தலைவரின் திருவுருவப்படம் வைக்கப்பட்டிருந்தது. அனைவருக்கும் இனிப்புகளும் வழங்கப்பட்டன. விழா முடிவில் திருமதி வி.ராதாராவ் நன்றி நவின்றார்.

—பீ. வி. கிரி



# கல்வி கரையிலே ...







பெரியார் மாவட்டத்தில்-மற்றெல்லா வளங்களும் போலவே கல்வி வளமும் நல்லபடி அமைந்திருக்கிறது.

சிக்கய்யநாய்க்கர் கல்லூரி, வாசவி கல்லூரி, வேளாண் மகளிர் கல்லூரி, ஈரோடு கலைக் கல்லூரி, கோபி கலைக் கல்லூரி, சக்தி தொழில் நுட்பக் கல்லூரி, ஈரோடு தொழில் நுட்பக் கல்லூரி, கொங்கு தொழில் நுட்பக் கல்லூரி, அரசு-ஈரோடு தொழில் பயிற்சி மையம், அரசு-தாளபுரம் தொழிற் பயிற்சிப் பள்ளி எனப் பல கல்லூரிகள் இருக்கின்றன இந்த மாவட்டத்தில். அரசு உயர் நிலைப்பள்ளிகள் ஐந்தும், திண்டலில் மெட்ரிகுலேஷன் ஆங்கில வழிக் கல்விமுறைப் பள்ளி ஒன்றும் புதிதாகத் துவக்கப்பட்டிருக்கின்றன,

1983-84ல், துவக்கப்பள்ளிகள் 7 திறக்கப் பட்டிருக்கின்றன. இந்த ஆண்டிலே மட்டும் 36 ஆசிரியர்கள், அதாவது 16 தமிழாசிரியர்கள் உட்பட நியமிக்கப்பட்டுள்ளனர்.

பெரியார் மாவட்டத்தில் உள்ள மேல் நிலைப்பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகள், உயர் துவக்கப்பள்ளிகள், துவக்கப்பள்ளிகள் ஆகியவற்றின் எண்ணிக்கை மட்டும் மொத்தம் 1664 ஆகும். இதில் அரசுப் பள்ளிகள், அரிசனநலப் பள்ளி, நகராட்சிப் பள்ளிகள், மாநகராட்சிப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் எல்லாம் அடங்கும்.

இந்த வட்டத்திலிருக்கும் மேல்நிலைப் பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகள், உயர் துவக்கப் பள்ளிகள், துவக்கப்பள்ளி ஆகியவற்றிலே கல்வி பயிலும் மாணவ மாணவியரின் மொத்த எண்ணிக்கை 320603. அவர்களுக்குக் கசடறக் கற்பிக்கின்ற ஆசிரிய-ஆசிரியைகளோ 8,788 பேர்களாவர்.

—பி. எல். ஆர்.




தந்தை பெரியார், நகர மன்றத் தலைவராக இருந்தபோது கட்டப்பட்டு, ஈரோட்டில் (26.5.1919) மூதறிஞர் ராஜாஜியால் திறந்து வைக்கப்பட்ட தண்ணீர்த் தொட்டி.

# குடிநீர்த் திட்டங்கள்

பெரியார் மாவட்டத்தின் தலைமையிடமான ஈரோடு ஒருங்கிணைந்த குடிநீர் வளர்ச்சித் திட்டத்திற்கெனத் தமிழ்நாடு அரசு ரூ. 272 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியது. இத்திட்டம் 2,80,000 மக்கட் தொகையின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்திடும் வகையிலே இம்மாவட்டத்தில் அமைக்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கான பணிகள் கடந்த மூன்றாண்டுகளில் 75 சதவீதம் வரை முடிக்கப்பட்டிருக்கிறது.

மழைநாளில், ஈரோட்டிலுள்ள முக்கியச் சாலைகளில் தண்ணீர் தேங்காதிருக்க, மழைநீர் வடிகால் திட்டமொன்று தீட்டப்பட்டது. இதற்கென 22 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அனுமதி வழங்கப்பட்டது. இத் திட்டம் நிறைவேற்றப்பட்டுவிட்டது.

இது தவிர, பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்த 10 பேரூராட்சிகளில் ரூ. 83.17 இலட்சம் செலவில் குடிநீர்த்திட்டப் பணிகள் மிகச் சிறப்பாக முடிக்கப்பட்டுள்ளன. இவைகளின் மூலம் 84 ஆயிரம் பேர் பயனடைவர்.

இன்னும் 7 குடிநீர்த்திட்டப் பணிகள் விரைவில் முடிவடைய இருக்கின்றன; 15 திட்டப்பணிகள் ஆய்விலிருக்கின்றன.

பல்வேறு குடிநீர்த் திட்டப் பணிகள் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமும், ஊரகக் குடிநீர்த் திட்டத்தின் மூலமும், வறட்சி நிவாரணம் மற்றும் பாதகமான பருவநிலைத்திட்டங்களின் கீழும், நகர்ப் பஞ்சாயத்துக் குடிநீர்த் திட்டம் மூலமும், நகராட்சிக் குடிநீர்த் திட்டம் மூலமும் நிறைவேற்றப்பட்டு - பெரியார் மாவட்ட மக்கள் பெரும்பயன் பெற்று வருகின்றனர்.

—இந்திரன்

## பெரியார் பேசுகிறார்

- அறிவை நம்புங்கள்; அப்போதுதான் விஞ்ஞான அற்புதங்களையெல்லாம் நம்மால் செய்ய முடியும்.
- எப்படிப்பட்ட கலையானலும் சரி, அது ஒழுக்கக் குறைவுக்கும், மூட நம்பிக்கைக்கும் சிறிதும் உதவுவதாய் இருக்கக் கூடாது.
- மனிதன் எந்த அளவுக்குப் பகுத்தறிவால் தெளிவு பெறுகிறானோ, அந்த அளவுக்குப் பக்குவமாகி விட்டான் என்று பொருள்.



# விளை பொருள்

பெரியார் மாவட்டத்தில் உள்ள மாநில விளைபொருள் விற்பனை வாரிய அமைப்புகள் மட்டும் இன்னமும் கோவை மாவட்டத்தோடு தொடர்புள்ளவைகளாகவே இருக்கின்றன. இதுபற்றி அந்த வாரியத்தின் தலைவர் திரு. கவிஞர் முத்துராமலிங்கத்திடம் கேட்டபோது —

''விரைவிலேயே எங்கள் வாரிய அமைப்புகள் பெரியார் மாவட்டத்திற்கெனத் தனித்துச் செயல்படச் செய்வதற்கான ஆக்கப் பணிகள் நடந்து வருகின்றன''

''சில மாவட்டங்களில் உள்ள விவசாயிகள், தமது விளை பொருட்களை எங்கள் வாரியச் சந்தைக்குக் கொண்டு வந்து விற்பதை வேறு சிலர் தடுப்பதாகவும் எங்களுக்குத் தகவல் வருகிறது. ஆனால், பெரியார் மாவட்ட விவசாயிகளுக்கு அந்தச் சங்கடமில்லை; அங்குதான் எங்கள் சந்தைக்கு நிறைய விளைபொருட்கள் விற்பனைக்கு வருகின்றன.'' என்றார்.





# புதுக்கோட்டையில் சுய வேலை வாய்ப்பு



படித்து வேலை கிடைக்காத இளைஞர்கள் சுயவேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ், பயனடைவோர் ஒவ்வொருவரும் 18 வயதிலிருந்து 35 வயதிற்குட்பட்டும் உயர் நிலைப் பள்ளிப்படிப்புத் தேர்ந்தவர்களாகவும் இருக்க வேண்டும். அதற்கு மேற்பட்ட கல்வித் தகுதி உடையவர்களும் இத் திட்டத்தின் மூலம் பயன் பெறலாம். தொழில் கல்வி கற்றவர்களும், பெண்களும் முன்னுரிமை பெறுவார்கள்.

ஒவ்வொருவருக்கும் ரூ. 25,000க்கு மேற்படாமல் தொழில் திட்டத்திற்கேற்ப வங்கிகள் மூலம் கடன் வழங்கப்படுகிறது. இதற்கு வட்டி விகிதம் புதுக்கோட்டை போன்ற பின்தங்கிய மாவட்டங்களில் 10 சதவிகிதமாகும்.

தொழில் தொடங்கும் இளைஞர்களுக்கு நிதி உதவியில் 75 சதவிகிதம் தொகையை முறையாகச் செலுத்தி பின் 25 சதவிகிதம் அரசு மானியமாக வழங்கப்படும். இத் திட்டத்தைச் செயல்படுத்த மாவட்டத் தொழில் மையப் பொது மேலாளர் தலைமையில் ஒரு பணிக்குழு அமைக்கப்பட்டு, தொழில் செய்ய நிதி உதவி பெறத் தகுதி வாய்ந்த இளைஞர்களைத் தேர்வு செய்து, வங்கி மூலம் கடனுதவி பெறப் பரிந்துரை செய்யும்.

இந்தச் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், புதுக்கோட்டை மாவட்டத்தில் 67 லட்சம் ரூபாய் நிதி உதவி, 2.4.'84 அன்று புதுக்கோட்டை நகர் மன்றக் கட்டடத்தில் நடைபெற்ற விழாவில் வழங்கப்பட்டது.

விழாவிற்கு, மாண்புமிகு ஊரகத்தொழில்துறை அமைச்சர் திரு. இராம. அருணாசலம் அவர்கள் தலைமையேற்றார். நிதி உதவிக்கான காசோலைகளை, மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு எம். ஆர். கோவேந்தன் அவர்கள் வழங்கினார்.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை 842 நபர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு, அவர்களில் 573 நபர்களுக்கு ரூ. 66,98,000 கடனாக வழங்கப்பட்டுள்ளது. இதில் தாழ்த்தப்பட்டவர்கள் 44, பெண்கள் 92, உடல் ஊனமுற்றோர் 2 நபர்கள் ஆவர்.

---

வேடசந்தூர் வட்டத்தில் 51 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களும், 4 கூட்டுறவுப் பால் வழங்கும் சங்கங்களும் இயங்கி வருகின்றன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 50 சதவீத மானிய உதவியுடன் பால் குவளைகள் மற்றும் மூன்று சக்கர வண்டிகள் சங்கங்களுக்கு வழங்க ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது. சங்க உறுப்பினர்கள் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கறவை மாட்டுக் கடன் பெறவும் ஆவன செய்யப்பட்டுள்ளது.

மதுராந்தகம் தொகுதியில் 75 கைப் பம்புகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் 66 கைப்பம்புகள் நல்ல நிலையில் இயங்கி வருகின்றன.

## சட்டமன்றச் செய்திகள்



# கோபால

ஒரு நாட்டின் முன்னேற்றம், அதனிடையே அமைந்துள்ள சாலை இணைப்புகளையே சார்ந்துள்ளது. நாட்டில் இன்று மேற்கொள்ளப்படும் தொழில் மற்றும் சமூக வளர்ச்சித் திட்டங்களின் முழு வெற்றிக்கு ,சிறப்புற அமைந்த சாலையமைப்பு இன்றியமையாதது. இதுவே கிராமப்புற வளர்ச்சிக்கும், பொருளாதார மேம்பாட்டுக்கும் வழிகோலுவதோடன்றி, பெருமளவிற்கு வேலைவாய்ப்பிற்கும் அடிப்படையாக அமைகிறது.

இந்த அடிப்படையில் திருநெல்வேலி மாவட்டம் கோபாலசமுத்திரம் அருகே தாமிரபரணி ஆற்றின் குறுக்கே ரூ.65 இலட்சம் செலவில் கட்டப்படவிருக்கும் பாலத்திற்கு அடிக்கல் நாட்டு விழா 28.4.'84 அன்று நடைபெற்றது.

தலைமைப் பொறியாளர் திரு டி.மோகன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.ப.குழந்தைவேலு அவர்கள் தலைமை உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது :



**''இப்பகுதியில் நீண்ட காலமாகப் பாலம் கட்டப்படாமல் இருந்தது. அதை இந்த அரசு கவனித்து, பாலத்திற்கு இன்று அடிக்கல் நாட்டுவிழா நடத்துகிறது. இதனால் இந்தப் பகுதி ஏழை எளிய மக்கள் பயன் பெறுவார்கள். இரண்டு ஆண்டுக் காலத்தில் இந்தப் பாலம் கட்டி முடிக்கப்படும்''**

விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு என்.எஸ்.ஹீரா இ.ஆ.ப., திரு வீ.கருப்பசாமி பாண்டியன் எம். எல். ஏ., மாண்புமிகு தமிழக அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு ஜி. ஆர். எட்மண்ட் அவர்கள், போக்குவரத்துத்துறைச் செயலர் திரு பி. சி. சிரியாக் இ.ஆ.ப., ஆகியோர் உரையாற்றினார்கள்.

மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு ஒய்.எஸ். எம்.யூசுப் அவர்கள் பேசுகையில் ''நான் இந்த மாவட்டத்தைச் சார்ந்தவன். இந்தப்பாலம் கட்டுவதன் மூலம் நகரப் பகுதிகளுடன் இப்பகுதி கிராமங்கள் இணைக்கப்படுகின்றன.'' என்றார்.



மாண்புமிகு சுற்றுப்புறச் சூழல துறை அமைச்சர் திரு எஸ். என் இராசேந்திரன் அவர்கள் பேசுகையில ''குப்தர், அசோகர் காலங்களில் சாலைகள், சாலை ஓரங்களில் மரங்கள், பாலங்கள் கட்டியிருந்தனர். அதே போல மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இன்று தமிழகத்தில் அமைத்து வருகிறார்கள்'' என்றார்.

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் திரு

பி.எச்.பாண்டியன் அவர்கள் உரையாற்றுகையில், ''கோபால சமுத்திரம் பகுதிக்கு மட்டும் ரூ. 1 கோடி செலவில் பல்வேறு பணிகள் செய்யப்பட்டுள்ளன.

தன்னிறைவுத் திட்டத்திற்கு இந்த ஆண்டு ரூ 18 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. **இந்தியாவில் இந்தச் சட்டமன்றத் தொகுதிதான் அதிக நிதி உதவியைப் பெற்றுள்ளது''**



# சமுத்திரத்தில்...

# நீண்ட நாள் கனவு நனவாகிறது!

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் பாலத்திற்கு அடிக்கல் நாட்டியும், கட்டடங்களைத் திறந்து வைத்தும், சமூகநல உதவிகளை வழங்கியும் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது.

''இந்தத் தொகுதியில் ரூ.10 கோடிக்கு மேல் அரசு மூலம் செலவு செய்யப் பட்டதாகதொகுதி உறுப்பினர் குறிப்பிட்டார். தமிழகத்தில் பின்தங்கிய, ஓரளவு முன்னேறிய மாவட்டங்களில் எல்லாம் மக்களின் தேவையை உணர்ந்து எப்படி எப்படித் திட்டம் தீட்டிச் செயல்பட வேண்டும் என்று நினைத்தேனோ அப்படியெல்லாம் திட்டங்கள் தீட்டிச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறேன்.

''இந்தப் பாலத் திட்டத்தினை இரண்டு ஆண்டுகளில் முடித்துத் தருவதாக அதிகாரி கூறினார். இரண்டு ஆண்டுகளில் இந்தப் பாலம் ஊர் மக்களுக்குப் பயன்படும் என்று கூறிக் கொள்கின்றேன்.

''அண்ணாவின் கொள்கையை நிறைவேற்றவில்லை என்று சொல்பவர்கட்குச் சொல்லுகிறேன். திட்டங்கள் கிராமத்திலிருந்து நகரங்களுக்குச் செல்ல வேண்டும். நகரத்திலிருந்து கிராமங்களுக்குத் திட்டங்கள் போகக் கூடாது என்று அண்ணா சொன்னார். முன்பிருந்தவர்கள் நகரங்களுக்கு அதிக அளவில் செலவு செய்தார்கள்.

''முந்தைய அரசு நகரங்களுக்கு ஏறத்தாழ ரூ.34 கோடியும் கிராமங்களுக்கு ரூ.13 கோடியும் செலவிட்டது. ஆனால் இந்த அரசு, நகரங்களுக்கு ஏறத்தாழ ரூ.16 கோடியும் கிராம மக்களுக்கு ரூ.60 கோடியும் செலவிட்டது. இந்த அரசுதான் கிராம மக்களுக்கு அதிக அளவில் உதவி செய்கின்றது. நாங்கள் செய்கிற திட்டங்களில் தவறு இருந்தால் சுட்டிக் காட்டுங்கள். திட்டங்கள் செய்வதே இல்லையென்று மட்டும்சொல்லாதீர்கள்.

''பச்சையாறுத் திட்டப்பகுதியில் ஆழப்படுத்தும் பணி முதலில் நடைபெற்ற பிறகு அணை கட்டப்படும். அணை கட்டும் பணி இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் சேர்த்துச் செயல்படுத்தப்படும்.

விழா இறுதியில் கண்காணிப்புப் பொறியாளர் திரு.அழ. ரெங்கநாதன் நன்றி கூறினார்.

**நிகழ்ச்சித் தொகுப்பு:**
**—அ. ம. விநாயகம்**

சேரன்மாதேவி சட்டமன்றத் தொகுதி, கோபாலசமுத்திரத்தில் புதிதாகக் கட்டப்படவுள்ள பாலமானது, அரசு இதர மாவட்டச் சாலையான கோபாலசமுத்திரச் சாலையையும், நரசிங்கநல்லூர் ஊராட்சிச் சாலையையும் இணைக்கும்.

இப்பாலம் கட்டப்படுவதால் கோபாலசமுத்திரம், பிரான்சேரி நரசிங்கநல்லூர், சுத்தமல்லி, அத்திமேடு, கருங்காடு ஆகிய கிராமங்கள் பேட்டை திருநெல்வேலி டவுன் முதலிய நகரங்களுடன் இணைக்கப்படுகின்றன.

மேற்கூறிய கிராம மக்கள், குறிப்பாக விவசாயிகள் திருநெல்வேலி டவுன் சந்தையை அடைவதற்கு-இப்பாலம் கட்டுவதால் சுமார் 6 கி.மீ. தூரம் குறைவாகிறது.

கட்டப்படவிருக்கும் உயர் மட்டப் பாலத்திற்கு அரசு அனுமதித்துள்ள தொகை ரூ.65 இலட்சம்,

இப்பாலமானது 1.5 மீட்டர் கொண்ட இரு வழிப்பாதை உள்ளதாகவும் இருமருங்கிலும் 1.50 மீட்டர் அகலமுள்ள நடைபாதைகளுடனும் அமையப் பெறும்.

இப்பாலம் 10 மீட்டர் அகலமுள்ள 22 கண்கள் கொண்டதாக அமையும். இப்பால வேலைக்கு 1,500 டன் சிமெண்டும், 135 டன் இரும்புக் கம்பிகளும் தேவைப்படும். இப்பாலத்தின் மொத்த நீளம் 220 மீட்டராகும்.

இப்பாலத்தைக் கட்டுவதற்கு கோபாலசமுத்திரம் பக்கமாகச் சுமார் 410 மீட்டர் நீளத்தில் அணுகுசாலையும், நரசிங்கநல்லூர் பக்கமாக 600 மீட்டர் நீளத்தின் அணுகு சாலையும் அமைக்கப்படும்.

இப்பாலம் கட்டப்படுவதால் கோபாலசமுத்திரம் மற்றும் இவ்வட்டாரத்திலுள்ள கிராம விவசாய மக்களின் 30 ஆண்டுக்கால தேவை நிறைவேற்றப்படுகிறது.

# ழப்பெரும் அறிஞர்களின்

# வ ர லா று



அதங்கோட்டாசான்

சுமார் இரண்டாயிரத்து எழுநூறு ஆண்டுகளுக்கு முன் அதங்கோட்டாசான் அதங்கோட்டில் வாழ்ந்ததாகக் கருதப்படுகிறது. பாண்டியன் அவையில் தொல்காப்பிய அரங்கேற்றத்திற்கு தலைமை வகித்த ஆசான் சிறந்த வில்லிசை எழுதும் கவிஞராகவும், உடற்கூறு தத்துவ சாஸ்திரங்களின் முன்னோடியாகவும், ஜோதிட கலையில் ஞானம் கொண்டவராகவும், தமிழ் மொழிபால் சிறந்த பற்றும் ஆர்வமும், தெளிந்த அறிவும் கொண்ட தமிழ்ப்பெரும் அறிஞராகத் திகழ்ந்தார். ஆசான் தலைமையில் தமிழ் முதல் சங்கம் சூரிய முக்கில் நடந்ததாகக் கருதப்படுகிறது. இவரின் தனிப் பெருமையை நாட்டிற்கும், இளம் தலைமுறையினருக்கும் உணர வைக்கும் வகையில் தமிழக அரசு ஆசான் வாழ்ந்ததாகக் கருதப்படும் அதங்கோட்டில் சிலை நிறுவத் தீர்மானித்து, 29—4—1984 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களால் திறக்கப் பட்டது



அமரர் ஜீவா
1906 - 1963

அமரர் ஜீவா நாஞ்சில் நாட்டின் பூதப்பாண்டியில் பிறந்தவர். ஆற்றல்மிகு மாணவராகத் திகழ்ந்த அமரர் சிறந்த காந்தியவாதி, வைக்கம் சத்தியாக்கிரகம், சுசீந்திரம் தீண்டாமை இயக்கம், சுயமரியாதை இயக்கம் போன்றவைகளில் தனிப் பங்கேற்றவர். பகத்சிங்கின் தோழர். சென்னை மாநகரின் தொழிற் சங்கத் தலைவராக இருந்தார். தேசீய விடுதலை இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டதின் காரணமாக, கைதாகி, பம்பாய் மத்திய சிறையில் 1942 வரை அடைபட்டிருந்தார். 1954ம் ஆண்டு தமிழக விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டு குமரி மாவட்டத்தைத் தமிழகத்தோடு இணைக்க, தீவிர தொண்டாற்றினார் அமரர் ஜீவா அவர்கள். இவர் ஒரு பெரும் இலக்கியவாதியாகவும், பத்திரிகை யாளராகவும் விளங்கினார்.

ஜீவா அவர்களின் இலக்கியச் சேவையினையும், நாட்டுப் பற்றினையும் சிறப்பிக்கும் வகையில், தமிழக அரசின் சார்பில் அமரர் ஜீவா அவர்களின் உருவச்சிலை அமைக்கப்பட்டு 29–4–'84 அன்று தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களால் திறக்கப் பட்டது



சதாவதானி
செய்குத் தம்பிப் பாவலர்
1874 - 1950

சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த கோட்டாறு இடலாக்குடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தமிழ் இலக்கண, இலக்கியங்களில் தேர்ந்த ஞானம் பெற்றவர். 1907 மார்ச்சு 10-ம் தேதி சென்னையில் தமிழ் அறிஞர்கள் முன்னிலையில் சதாவதான நிகழ்ச்சிகள் செய்து பாராட்டுப்பெற்றார். சிறந்த தமிழறிஞராகிய பாவலர், நபிகள் நாயக மான்மிய மஞ்சரி, திருக்கோட்டாற்றுப் பதிற்றுப் பத்தந்தாதி, திருமதீனத்தந்தாதி, கோட்டாற்றுக் கலம்பகம், கோட்டாற்றுப் பிள்ளைத் தமிழ், கல்வத்து நாயகம், இன்னிசைப் பாமாலை, நீதி வெண்பா, ஷம்சுத்தாசீன் கோவை போன்ற கவிதை நூல்களையும், தேவலோக பழிக்குற்ற வழக்கு, வேதாந்த விவகார பழிக்குற்ற வழக்கு, போன்ற வசன நடைக்காவியங்களையும் எழுதியுள்ளார். பாவலர் சீரிய தமிழறிஞர் மட்டுமின்றி நாட்டின் விடுதலைப் போராட்ட வீரராகவும் திகழ்ந்தார். அயல் நாட்டுத் துணிகள் புறக்கணிப்பு, தீண்டாமை ஒழிப்பு போன்ற இயக்கங்களில் தீவிரப் பங்கேற்றார். பாவலரது தமிழ்த் தொண்டினையும், நாட்டுப் பற்றினையும் சிறப்பிக்கும் வகையில் அவர் வாழ்ந்த இடமான கோட்டாறில் ரூ. 4.10 லட்சம் செலவில் நினைவு மண்டபம் அமைக்க, தமிழக அரசு முடிவு செய்து 29—4—1984 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களால் மண்டபத்திற்கு அடிக்கல்



# ஆலயந் தொழுவது...



**கோ**ங்குவள நாட்டின் ஒரு பகுதியான பெரியார் மாவட்டத்திலிருக்கின்ற ஆலயங்கள் பெரும்பாலும் பழம் பெருமை மிக்கவைகளாகத் திகழ்கின்றன.

அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், அருள்மிகு பாரியூர் கொண்டத்துக் காளியம்மன் திருக்கோயில், அருள்மிகு பச்சைமலை சுப்பிரமணியசாமி திருக்கோயில், அருள்மிகு பவளமலை முத்துக்குமாரசாமி திருக்கோயில், அருள்மிகு சிவன்மலை சுப்பிரமணியசாமி திருக்கோயில், அருள்மிகு சென்னிமலை சுப்பிரமணியசாமி திருக்கோயில், அருள்மிகு பவானி சங்கமேஸ்வரர் ஆலயம், அருள்மிகு கொடுமுடி மகுடேஸ்வரர் திருக்கோயில் எனப் பெரியார் மாவட்டத்திலிருக்கின்ற திருக்கோயில்களின் பட்டியல் இன்னும் வளர்ந்து கொண்டே போவதாகும்.

தன்மானக் கொள்கைகளுக்கு-நாத்திகக் கருத்துகளுக்கு வித்தூன்றிய தந்தை பெரியார் அவர்கள் பிறந்த மாவட்டமான இங்கே மட்டும் 1712 திருக்கோயில்கள் மற்றும் அறநிறுவனங்கள் தமிழ்நாடு அரசின் இந்துசமய அறநிலையத்துறைக் கட்டுப்பாட்டின் கீழே உள்ளன.

ஆண்டு வருமானம் ஒரு இலட்சம் ரூபாய்க்குமேல் வரக்கூடிய கோயில்களே இங்கு ஏழு இருக்கின்றன! அவைகளின் விவரங்கள் வருமாறு:

கடந்த ஆண்டு வருமானம் மட்டுமே - கொடுமுடியிலிருக்கிற அருள்மிகு மகுடேஸ்வரர் திருக்கோயிலுக்கு மட்டும்















ரூ. 4,89,295 ஆகும். பாரியூரிலிருக்கிற அருள்மிகு கொண்டத்துக் காளியம்மன் திருக்கோயிலுக்கு ரூ. 2,00,169. சிவன்மலையில் உள்ள அருள்மிகு சுப்பிரமணிய சாமி திருக்கோயிலுக்கு ரூ. 2,43,603. சென்னிமலை சுப்பிரமணியசாமி திருக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ.2,65,612. ஈரோட்டில் உள்ள அருள்மிகு பெரிய மாரியம்மன்-சின்னமாரியம்மன் திருக்கோயில்களின் வருமானம் ரூ. 3,99,731 .வெங்கம்பரில் இருக்கும் அருள்மிகு வரதராசப் பெருமாள் திருக்கோயிலுக்கு ரூ. 3,14,963.

காங்கயம் வட்டத்திலும், தாராபுரம் வட்டத்திலும், பவானி வட்டத்திலும், கோபி வட்டத்திலும் உள்ள பல்வேறு கோயில்களின் திருப்பணிகள் இந்துசமய அறநிலையத்துறையால் மிகச்சிறப்பாக நடந்து முடித்திருக்கின்றன; சில இடங்களில் மிகத் துரிதமாக நடந்து கொண்டிருக்கின்றன.

1983ஆம் ஆண்டிலே மட்டும் பெரியார் மாவட்டத்திலே இருக்கின்ற ஐந்து திருக்கோயில்களில் கும்பாபிசேகம் நடந்து முடிந்திருக்கிறது.

கொடுமுடியிலிருக்கின்ற அருள்மிகு மகுடேஸ்வரர் திருக்கோயிலிலும், சென்னிமலையில் உள்ள அருள்மிகு சுப்பிரமணியசாமி திருக்கோயிலிலும் அன்பு இல்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. பண்ணாரியில் இருக்கும் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் சார்பில் 50 குழந்தைகள் தங்கும் வசதியோடு அமைக்கப்பட்ட அன்பு இல்லம் ஒன்றை அண்மையில்தான் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் திறந்துவைத்தார்.

வெங்கம்பரில் உள்ள அருள்மிகு வரதராசப் பெருமாள் திருக்கோயில் நிதியில் திருமண மண்டபம் ஒன்று எழிலுறக் கட்டியிருக்கிறார்கள்.

சென்ற மாதம் வரையிலே - அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், ஈரோடு அருள்மிகு பெரிய மாரியம்மன் திருக்கோயில், சென்னிமலை அருள்மிகு சுப்பிரமணியசாமி திருக்கோயில் மற்றும் சில திருக்கோயில்கள் ஆகியவற்றிலே 250க்கும் மேலான ஏழை ஆதிதிராவிட மக்களுக்குத் திருமணம் நடத்தப்பட்டுள்ளது குறிப்பிட்டுக் கூறத்தக்க பெருமை உடையதாகும்.

கொங்குத் திருநாட்டின் ஒரு பகுதியான இந்தப் பெரியார் மாவட்டத்தில், குறிஞ்சித் தெய்வமான முருகப் பெருமானுக்கு நிறைய கோயில்கள் இருக்கின்றன. பெரிதும் முருகன் கோயில்கள் குன்றுகளின் மேலேயே காணப்படுவதன் காரணமாக, எல்லா மலைகளையும் ஒருதொகுதியாக வைத்து அவற்றைக் குன்றுதோறாடல் எனக் குறிப்பிடுவார்கள்.

முருகனின் ஆறுபடை வீடுகளான தொகைத் தலங்களில் சென்னிமலையும் ஒன்றாகக் கருதப்படுகிறது. இன்னும் சொல்லப்போனால், குன்றுதோறாடல் தலங்களில் கொங்குநாட்டு 24 பகுதிகளின் தலையாய பூந்துறை நாட்டிலிருக்கின்ற சென்னிமலையே முதன்மையானதெனக் கருதப்படுவது.

சென்னிமலை என்ற இந்த ஊரை உருவாக்கியதும், மலைமேல் உள்ள முருகனைச் சென்று தரிசிக்கத் தக்க பாதை அமைத்ததும் விஜயாலய சோழனே என்கிறார்கள் வரலாற்றாசிரியர்கள்.

இப்படிப் பழம்பெருமை மிக்க கோயில்கள் பல உண்டு பெரியார் மாவட்டத்தில்!

– இராசேந்திரன்



# உழவே தலை!

பெரியார் மாவட்டத்தில் - நெல் மட்டுமே அல்ல; மஞ்சள், கரும்பு, சோளம், புகையிலை, பருத்தி, கேழ்வரகு, நிலக்கடலை எள், ஆமணக்கு, சூரியகாந்தி, தென்னை, மரவள்ளி, காய்கறி வகைகள், பூ வகைகள், பழ வகைகள், குதிரை மசால், பயறு வகைப் பயிர்கள் போன்ற எல்லாமே நல்ல விதமாகப் பயிராகின்றன. மாவட்ட மண்வாகு மட்டுமே அல்ல; தட்ப வெப்ப நிலையும் எல்லாவற்றுக்கும் தக்கதாக உள்ளது.

எனவே வேளாண்மைத் தொழில், பெரியார் மாவட்டத்தின் பெரும் பான்மை மக்கள் ஈடுபடும் தொழிலாக இருக்கின்றது.

இங்கு-காலிங்கராயன் அணைக்கட்டு மூலம் பயன்பெறும் இரண்டாயிரம் ஏக்கர் நிலமும் முப்போகம் விளைவதாகும். கீழ் பவானி, கொடிவேரி அணைகளின் மூலமும், அரங்கன்கோட்டை - தடப்பள்ளி வாய்க்கால் மூலமும் ஒருலட்சம் ஏக்கருக்கு மேலான நஞ்சை நிலம் பயனடைகிறது.

பழைய அமராவதிப் பாசனம் மூலம் தாராபுரம் வட்டம் செழிப்படைந்து வருகிறதென்றால், புதிய அமராவதிப்பாசனத் திட்டத்தின் மூலம் பத்தாயிரம் ஏக்கர் நிலம் பயனடைகிறது.

பெரியார் மாவட்டத்திலிருக்கும் உப்பாறு நீர்த்தேக்கம் மூலம் ஏழாயிரம் ஏக்கர் நிலமும், பரம்





பிக்குளம்-ஆளியாறு மேட்டூர் மேற்குக் கரை வாய்க்கால்கள் மூலம் 72 ஆயிரம் ஏக்கர் நிலமும் பாசன வசதி பெறுகிறது. குண்டேரிப் பள்ளம், வறட்டுப்பள்ளம் மூலம் ஏழாயிரம் ஏக்கர் நிலம் பயனடைகிறது. வட்ட மலைக் கரை ஓடைப் பாசனத்தால் மூவாயிரம் ஏக்கர் நிலம் பயன்பெறுகிறது.

பெரியார் மாவட்டத்தில் பயிர்ச் செலவுக்கு உதவிடும் பெரிய குளங்கள் 42 இருக்கின்றன. 75 ஆயிரம் கிணறுகளும் இந்த வகையில் உதவுகின்றன.

தமிழகத்திலேயே நெல், கரும்பு, மஞ்சள் விளைச்சலில் பெரியார் மாவட்டம் குறிப்பிடத்தக்க மாவட்டமாகத் திகழ்கிறது. கல்கத்தா, மகாராட்டிரம், வங்காளம் போன்ற இடங்களுக்கு ஏற்றுமதி செய்கிற அளவில் இங்கே மஞ்சள் விளைச்சல் அதிக அளவில் இருக்கிறது.

ரொபஸ்ட்டா, பூவன், நேந்திரன் போன்ற வாழை ரகங்களும் இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன.





1982 ஜுலை முதல், பயிற்சி வழித் தொடர்புத் திட்டம் இம் மாவட்டத்திலே செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தாராபுரத்தில் உள்ள உழவர் பயிற்சி நிலையத்திலிருந்து, 'உழவர் முரசு' என்றொரு பத்திரிகை வெளியிடுகிறார்கள். உழவர் பெருமக்களுக்கு உதவிகரமாக இருக்கும் பல ஆலோசனைகள் இந்த ஏட்டின் மூலம் வெளியிடப்படுகின்றன.

தமிழக அரசால், பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்த பவானி வட்டத்திலிருக்கும் குப்பநாய்க்கன் பாளையத்தில் விதைச் சுத்திகரிப்பு நிலையம் ஒன்று அமைக்

கப்பட்டிருக்கிறது. 23.9.'78ல், 2 விதைச் சேமிப்புக் கிடங்குகளுடனும், சுத்திகரிப்பு ஆலையுடனும் காயவைத்தல் போன்ற பணிகளுக்கான கள வசதியோடும் ரூ. 5,73,573 செலவில் ஆரம்பிக்கப்பட்டது இது.



''இந்த விதைச் சுத்திகரிப்பு நிலையம் ஓராண்டுக்கு ஆயிரம் டன் விதைகளைச் சுத்தம் செய்யும் திறன்படைத்தது'' என்றார் பெரியார் மாவட்ட இணை வேளாண்மை இயக்குநர் திரு. சி. மணிமந்திரி.

விதைச் சுத்திகரிப்புக்கெனப் பல லட்சம் ரூபாய்கள் பெறுமானமுள்ள 9 வகை இயந்திரங்கள் இங்கே பொருத்தப்பட்டிருக்கின்றன.

இந்த நிலையத்தில், ஆமிலத்தின் உதவியால் பருத்திக்கொட்டைகளின் மேலே உள்ள பஞ்சை நீக்கி, விதைக்கென வேளாண்மைக் கிடங்குகள் மூலம் தருகிறார்கள். பஞ்சு நீக்குவதால் பருத்தி விதையைப் பலவகைப் பூச்சித் தாக்குதல்களிலிருந்து காக்க முடிவதோடு விதையின் அளவும் குறையும்; விதைப்பதும் எளிதாகும்.

விதைகளைப் பாதுகாக்க இந்தச் சுத்திகரிப்பு நிலையத்தில் ரூ. 1,35,000 திட்டத்தில் ஒரு கிடங்கும் கட்டப்பட்டு வருகிறது.

இதனருகே, 86.86 ஏக்கர் பரப்பளவில் அரசு விதைப் பண்ணையொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பண்ணை மூலம் தரமான விதைகளை உற்பத்தி செய்து, பெரியார் மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு விநியோகிக்கிறார்கள்.

இந்தப் பண்ணைக்கு ஆகஸ்ட் முதல் டிசம்பர் வரை மேட்டூர் மேற்குக் கரை கால்வாய் மூலமும் அதிகத் தேவைக்குக்காவிரியாற்று மூலமும் நீர்ப்பாசனம் பெறப்பட்டு வருகிறது. இதற்காகவே காவிரியாற்றில் 30 மற்றும் 50 குதிரைத் திறன்கொண்ட நீர் இறைக்கும் இயந்திரங்கள் இரண்டு அமைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பண்ணையில் இரட்டை வரிசை நடவு என்று ஒரு புதிய முறையைப் பரீட்சார்த்தமாகக் கையாளுகிறார்கள். புதுப்புது முறைகளில், பூச்சித் தொல்லைகளிலிருந்து பயிர்களைக் காக்கிறார்கள்.

பண்ணைக்காடுகள் திட்டத்தின் கீழ் இங்கே மரநாற்றுகளையும் உருவாக்கி வருகிறார்கள். இவை வளர்ந்தபின் கால்நடைத் தீவனமாகவும், உரமாகவும், விறகாகவும் பயன்படும். இந்த நாற்றுக்கள் பெரியார் மாவட்ட விவசாயிகளுக்கு 50 சதவிகித மான்ய விலையிலே அளிக்கப்படுகின்றன.

**—பி. எல். ராஜேந்திரன்**

---

**த**மிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 10வது பட்டமளிப்பு விழா (5.5.84) சிறப்புற நடைபெற்றது. சென்னையிலுள்ள கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற இவ்விழாவிற்கு வருகை தந்தோரை, கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் வி.ராஜகோபாலன் வரவேற்றார். மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் டாக்டர் கா. காளிமுத்து தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்கள் பங்கேற்று 596 பேர்களுக்குப் பட்டங்களை வழங்கினார். இந்திய வேளாண்மை ஆய்வுக்குழு பொது இயக்குநர் டாக்டர் ஓ.பி. கௌதம் இதில் பங்கேற்றார்.



# ஜீவா

## போக்குவரத்துக் கழகம்

**தில்லை கோவிந்தன்**
மக்கள் தொடர்பு அலுவலர் (பொறுப்பு)
பெரியார் மாவட்டம்

பெரியார் மாவட்டத்தில் 28.11.'82ல் துவக்கிவைக்கப்பட்டதுதான் ஜீவா போக்குவரத்துக் கழகம்.

''மறைந்த தலைவர்களின் பெயர்களை அரசு நிறுவனங்களுக்கு வைக்கத் தமிழ்நாடு அரசு முடிவு செய்திருக்கிறது. அந்த வகையில் மறைந்த தமிழ் அன்பர், பொது உடைமைத் தத்துவத்திற்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர், எதையும் தாங்கும் இதயம் கொண்டிருந்தவர், மறைந்தவர், எனது நண்பர் ஜீவா பெயரை இந்தப் போக்குவரத்துக் கழகத்திற்கு வைக்க முடிவுசெய்தோம்'' என்ற விளக்கத்தோடு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆரம்பித்து வைத்ததுதான் இந்தப் போக்குவரத்துக் கழகம்.

1.4.'83 முதல், சேரன்போக்குவரத்துக் கழகத்திலிருந்து இது தனித்து இயங்கத் தொடங்கியபோது, 123 சுற்றுலாப் பேருந்துகள் உட்பட 330 பேருந்துகள் இதிலிருந்தன; ஈரோடு, கோபி, சத்தியமங்கலம், காங்கேயம், தாராபுரம், பழனி, கரூர், கோவை, பவானி, திருப்பூர் ஆகிய 10 கிளைகள் இருந்தன.

கோவை, திருச்சி, மதுரை, ஊட்டி, பாலக்காடு, தஞ்சாவூர் ஆகிய நகரங்களுக்கும் இப்போது புதிய வழித்தடங்களில் 14 பேருந்துகள் விட்டிருக்கிறார்கள். இதனால் ஏறத்தாழ இரண்டு லட்சம்பேர் பயனடைகின்றனர்.

வண்டிகளின் பாகங்கள் புதுப்பித்தல், டயர் புதுப்பித்தல், பாடி கட்டுதல் போன்றவற்றுக்கான தனித் தொழிற்சாலையும் ஜீவா போக்குவரத்துக் கழகத்திற்கு உண்டு.

சாதாரணப் பேருந்துகள் 'மினி' பேருந்துகள், நான்கு வழிப்பேருந்துகள், 56 அடி நீள மிக நீண்ட பேருந்துகள் என 'ஜீவா'வின் பல தரப்பட்ட பேருந்துகளிலே நாள்தோறும் இரண்டரை இலட்சம் பேர்களுக்கு மேல் பயணம் செய்கின்றனர்.

பெரியார் மாவட்டத்தில் 'குளுகுளு' வசதிப் பேருந்தும் ஓடுகிறது.

நாள் ஒன்றுக்குப் பத்தாயிரம் கிலோ மீட்டர் தூரத்திற்கு ஜீவா போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் சென்றுவருகின்றன.

இந்த ஆண்டில், 'புதிதாக 30 பேருந்துகள் விடத் திட்டமிட்டதில் 10 பேருந்துகள்





முடிவடைந்து ஓடிக்கொண்டிருக்கின்றன. கோயம்புத்தூருக்கும் சேலத்திற்கும் ஈரோடு வழியே புதிதாகஒரு 'குளுகுளு' பேருந்து விடவும் முடிவுசெய்திருக்கிறார்கள் இவர்கள்.

அதிக தூரம் செல்லும் வண்டிகளிலே பயணம் செய்வோர், அலுப்பையும், களைப்பையும் அறியாதிருக்கும் பொருட்டு, 90 பேருந்துகளில் 'டேப்ரிக்கார்டர்' பொருத்தப்பட்டு இசையோடு போக்குவரத்து நடந்துவருகிறது.

'ஜீவா'வுக்காகக் காத்து நிற்கிறவர்கள், வெயில்,மழைக்கு அஞ்சக்கூடாது என்ற கருத்தில், பெரியார் மாவட்டம் முழுமையிலும் 40 நிழற்குடைகளை இவர்களே அமைத்திருக்கிறார்கள். இன்னும் 40 அமைக்கத் திட்டம் வைத்திருக்கிறார்கள்.

''மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் ஆலோசனையின் பேரில், சாலை விபத்துகளைத் தவிர்க்கும் பொருட்டு 4 இடத்தில் நாங்களே சிக்னல் விளக்குகளை அமைத்திருக்கிறோம்; விரைவில், மேலும் இரண்டு இடத்தில் அமைக்கவிருக்கிறோம்'' என்றார் ஜீவா போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் திரு.நா.இராமகிருஷ்ணன்.



நிர்வாக இயக்குநருடன் சந்திப்பு

'ஜீவா' தவிர-வேறு நான்கு போக்குவரத்துக் கழகப் பேருந்து வண்டிகளும் பெரியார் மாவட்டத்தில் ஓடுவதால் 'சிக்னல் விளக்கு' அமைக்க அவர்களும் உதவியுள்ளனர்.

ஓட்டுநர் பயிற்சிக்கு மட்டுமல்ல; எரிபொருள் சிக்கனத்திற்கும் தனிவகுப்பு நடத்துகிறார்கள் ஜீவா போக்குவரத்துக் கழகத்தில். இதனால் விபத்துக்கள் குறைவு. எங்காவது விபத்துக்கள் தொடர்ச்சியாக நடக்கும் பட்சத்தில் அதற்கெனத் தனி ஆய்வு நடத்தி, அந்த இடத்தில் எச்சரிக்கைப் பலகை வைக்கப்படுகிறது. அப்படி இந்த மாவட்டத்திலே ஆறு இடங்களில் எச்சரிக்கைப் பலகை வைத்திருக்கிறார்கள்.

மொத்தத்தில் ஜீவா போக்குவரத்துக் கழகத்தில் 2,344 பேர் பணிபுரிகின்றனர்.

ஒவ்வொரு கிளையிலும் ஒவ்வொரு சிற்றுண்டிச்சாலை, அங்கே மிக மிகக் குறைந்த விலையில் சிற்றுண்டி, சாப்பாடு தருவது மட்டுமல்ல; சம்பளநாளன்று மிகவும் குறைந்த விலையில் இனிப்புப் பொட்டலங்களும் வழங்குகிறார்கள் இங்கே.

ஜீவா போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களின் பிள்ளைகள் படிக்க நிதியுதவியும் அளிக்கப்படுகிறது. தொழில் நுணுக்கப் பட்டம் பெற அவர்களுக்கு இலவசப் படிப்புதவி செய்வது மட்டுமல்ல; பட்டம் பெறுவோருக்கு இவர்களே வேலையும் தருகிறார்கள். பள்ளி சென்று திரும்ப இவர்களுக்கெல்லாம் அடையாள அட்டைகள் தரப்படுகின்றன. இலவச மருத்துவ உதவி, ஆண்டொன்றுக்கு 2750 கிலோ மீட்டர் வரை தொழிலாளர்கள் குடும்பத்தோடு சுற்றுப் பயணம் சென்றுவர இலவச உதவி, எரிபொருள் சேமிப்பு ஊக்கத்தொகை, தொழிலாளர் கல்வி நலத்திட்டம், மனமகிழ் மன்றம், நூலக வசதி, தொழிலாளர் கூட்டுறவு வீடுகட்டும் சங்கம் எல்லாம் இங்குண்டு.

விரைவில், பெரியார் மாவட்டத்தில், போக்குவரத்துக் கழகங்களின் நிதி ஆதாரத்தில் தொழில் நுணுக்கக் கல்லூரி ஒன்று அமையவிருப்பது குறிப்பிடத்தக்கது.

விளையாட்டுப் போட்டிகளிலும், கிராமியக் கலையான புலியாட்டத்திலும் ஜீவா போக்குவரத்துக் கழகத்தார் சிறந்து விளங்குகின்றனர்.







# கதர் கிராமத் தொழில்

பெரியார் மாவட்டத்தில், கதர் கிராமத் தொழில் வாரியம் பாங்குறப்பணியாற்றி வருகிறது.

'கிராமங்களின் வளர்ச்சியே நகரங்களின் எழுச்சி' என்று காந்தியடிகள் கூறியதற்கிணங்க சிறப்போடு செயலாற்றி வரும் இந்த வாரியத்தின் கீழ் - பெரிய அக்ரகாரம், மரவபாளையம் இரண்டு இடங்களிலும் தோல் பதனிடும் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தச்சுத்தொழில் செய்திடுவோருக்கு ஈரோடு, பவா'னி, கோபி ஆகிய இடங்களில் உள்ள தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் உதவுகின்றன.

கொளத்துப் பாளையத்தில் பாய் முடைவோர் கூட்டுறவுச் சங்கமும், ஓலகடத்திலும், திங்களூரிலும் மண்பாண்டத் தொழிலாளர் பாண்ட உற்பத்திக் கூட்டுறவுச் சங்கமும், தூக்கநாய்க்கன் பாளையத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும் இயங்கிவருகின்றன.

இவற்றின் மூலம் ஏறத்தாழ 700 பேர் பயன் பெற்று வருகின்றனர்.



காங்கேயம், மொடக்குறிச்சி, வெள்ள கோயில் ஆகிய ஊர்களில் சோப்பு உற்பத்திக்கும் -ஈரோட்டில் காலணி உற்பத்திக்கும் எனத் தனித்தனி அலகுகள் இருக்கின்றன. கெங்கம்பாளையத்தில் மாதிரி தோல் பதனிடும் நிலையமும்-குரோம் தோல் பதனிடும் நிலையமும், செண்பகம்புதூரில் கைமுறைக் காகித அலகும் உள்ளன. கதர் கிராமத்தொழில்வாரியக் கவனிப்பில் உள்ள இவற்றின் மூலம் மட்டுமே 110 பேர் பயன் பெற்று வருகிறார்கள்.

1982-83ல், பெரியார் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் உற்பத்தி நிலையங்களின் மூலம் ரூ.24.03 இலட்சம் பெறுமானமுள்ள பொருட்களின் உற்பத்தியும், ரூ. 77.19 இலட்சத்திற்கான விற்பனையும் ஆகியுள்ளது.

நடப்பாண்டில், கடந்த பிப்ரவரி முடிய ரூ. 75.91 இலட்சம் உற்பத்தியும், ரூ. 87.30இலட்சம் விற்பனையும் நடைபெற்றுள்ளது.

17.9.79ல், பெரியார் மாவட்டம் துவக்கப்பட்ட அன்றே உருவாக்கப்பட்ட கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம், தொழில் தொடங்கத் தனிநபர்களுக்கு நிதியுதவியும் கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு மூலமும் பெற்றுத் தரப்படுகிறது. இவ்வாறான கடன்,இந்த மாவட்டத்தில் விசைச் செக்கு மூலம் எண்ணெய் தயாரிப்பது, மண்பாண்டத் தொழில், சோப்புத் தொழில், தேனீ வளர்ப்பு, அப்பளம் தயாரித்தல், பொரி மற்றும் அவல்தயாரித்தல், தச்சு, கொல்லு, காலணி உருவாக்கல், தோல் பதனிடல், சுண்ணாம்பு தயாரித்தல் போன்ற தொழில்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன.



இதன் மூலம் ஆதிதிராவிடர்கள் 406 பேர்களும், மலைவாழ் மக்கள் 35 பேர்களும், மற்றவர்கள் 1373 பேர்களும் பயனடைந்திருக்கிறார்கள்.




# கலைமகள் கல்வி நிலையம்





பெரியார் மாவட்டத் தலைமையிடமான ஈரோட்டில், திரு. எஸ். மீனாட்சிசுந்தரனாரால் துவக்கப்பட்டுள்ள கலைமகள் கல்வி நிலையம் 35 ஆண்டுக்காலப் பழமையுடையது. இங்கே பயிலும் மாணவிகள் ஆண்டுதோறும் நல்ல விழுக்காட்டில் மதிப்பெண் பெற்றுத் தேர்ச்சி பெறுகிறார்கள்.

1978ல், கலைமகள் கல்விக் கூடத்தில் துவக்கப்பட்ட தொல்பொருள் கலைக்கூடத்தில் முதுமக்கள் தாழி, பண்டைக்கால ஆயுதங்கள், பழமைச் சிறப்பு வாய்ந்த ஓலைச்சுவடிகள், நடுகற்கள், மூவேந்தர் கால நாணயங்கள், அணி மணிகளெல்லாம் சேகரித்து வைத்திருக்கிறார்கள். அகழ்ந்தெடுத்த பழஞ் சிற்பங்களும் இங்குண்டு.

செல்வி எம். முத்தையா தாளாளராக இருக்கும் இந்தக் கல்வி நிலையத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அண்மையில் அருங்காட்சியக ஆய்வு மையத்தைத் தொடங்கிவைத்திருக்கிறார்.



கலைமகள் கல்வி நிலையம் சார்பில் இலங்கைத் தமிழர் நிதிக்கென ரூ. 10 ஆயிரம் அளிக்கப்படுகிறது.

## முதல்வரின் முத்துக்கள்

புகழை நாம் தேடிச் செல்லக் கூடாது; அதுதான் நம்மைத் தேடிவர வேண்டும்.

சொந்தக் காலில் நிற்பது கல்லது மட்டுமல்ல; நடைமுறைக்குத் தேவையானதும் ஆகும்.

நல்ல நிலமைக்கு வந்த பிறகு நாம் அனுபவித்த துன்ப, துயரங்களை நினைவில் கொண்டால்தான் நமது கடமையைச் சரிவர நிறைவேற்ற முடியும்.



## ஏலகிரியின் ஏற்றம்

அலாவுதீனின் அற்புத விளக்கைப் படித்திருக்கிறோம். வட ஆர்க்காடு மாவட்டம், ஏலகிரியில் அமைந்துள்ள மலைவாழ் மக்களுக்கான கூட்டுறவுச் சங்கம் இப்பொழுது நம் கண்ணெதிரில் இந்த அற்புத விளக்கின் சாதனையைச் சாதித்துள்ளது.

இந்தக் கூட்டுறவுச் சங்க அங்கத்தினர்களின் ஆண்டு வருமானம் ரூ 150ல் இருந்து ரூ 200 வரை இருந்தது. சங்கம் செயல்பட ஆரம்பித்தபின் இப்பொழுது தனி நபர் வருமானம் ஆண்டுக்கு ரூ 1500 என்ற அளவில் உயர்ந்துள்ளது!




கிராமங்களின் வளர்ச்சி கருதி மாண்புமிகு முதல்வர் அவர்களால் உருவாக்கப்பட்ட தன்னிறைவுத் திட்டப் பணிகள் பெரியார் மாவட்டத்தில் பெருமைப்படக் கூடியவைகளாக இருக்கின்றன.

இணைப்புச் சாலைகள் அமைத்தல், சிறுபாலங்கள் உருவாக்கல், பள்ளிக்கட்டடங்கள் கட்டல், ஆதிதிராவிடர் இடுகாட்டுக்குப் பாதை அமைத்தல், சிறுபாசனக் குட்டைகள் அமைத்தல், மகப்பேறு நிலையங்கள், கிராமிய மருந்தகங்கள் கட்டுதல், ஊராட்சி ஒன்றியச்சாலைகள் பழுது பார்த்தல், பொதுக் கழிப்பிடம் - சாக்கடைகள் அமைப்பது போன்ற தன்னிறைவுத் திட்டத்தின் கீழான பணிகள் மட்டும் முதல் கட்டத்தில் 240 முடிக்கப்பட்டிருக்கின்றன. பெரியார் மாவட்டத்தில், இரண்டாம் கட்டத்தில் முடிக்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கை 1358 என உயர்ந்திருக்கிறது. மூன்றாம் கட்டத்தில் 1211 வேலைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இவைகளுக்காக ரூ.835 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இவை தவிர, பெரியார் மாவட்டத் தன்னிறைவுத் திட்டத்தின் கூடுதல் பணியாக 213 வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இதுமட்டுமல்ல, தேர்ந்தெடுக்கப்பட்டுச் செயல்படுத்திவரும் 264 பணிகளுக்கென இதுவரை ரூ.28,43,031 செலவாகியுள்ளது.

சத்தியமங்கலம் நகராட்சியில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 48 பணிகளும், பவானி நகராட்சியில் 31 பணிகளும், பவானி சாகர் நகரியத்தில் 58 பணிகளும் முடிக்கப்பட்டிருக்கின்றன; சில முடிவுற இருக்கின்றன.

இவை தவிர, பெரியார் மாவட்டத்தில் 1982-83ல் 106 பொதுக் கழிப்பிடங்கள் ரூ.15.105 இலட்சத்தில் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. 1983-84ல் 245 பொதுக் கழிப்பிடங்கள் கட்ட அனுமதிக்கப்பட்டு விரைவாக வேலை நடந்துவருகிறது.

# தன்னிறைவுத் திட்டம்





# தாராபுரம் கூட்டுறவு நூற்பாலை







பெரியார் மாவட்டம் தாரா புரத்தில் இருக்கும் கூட்டுறவு நூற்பாலையில் தயாராகும் நூலுக்கு மாதம் ஒன்றுக்கு 1,285 பேல் பஞ்சு தேவைப்படுகிறது!

58.2 ஏக்கர் பரப்பளவில் அமைந்திருக்கும் இந்த ஆலை யில் பர்மா, இலங்கை அகதிகள் 218 பேர் பணியாற்றுகிறார்கள், மொத்தத்தில் இங்கே 906 பேர் வேலை செய்கின்றனர்.

19.10.63ல் இந் நூற்பாலை துவக்கப்பட்டபோது இதன் பங்கு மூலதனம் ரூ. 21.27 இலட் சமாக இருந்தது. இப்போதோ அது ரூ. 87.97 இலட்சமாகப் பெருகியிருக்கிறது.

அரசின் பங்கு மூலதனம் ரூ. 71.65 இலட்சமாகும்.

தாராபுரம் நூற்பாலைக்குத் தேவைப்படும் மூலப்பொருட்கள் இங்கு கிடைப்பது போக மற்றை யவை மகாராட்டிரத்திலிருந்தும், பம்பாயிலிருந்தும், அரியானா விலிருந்தும், குஜராத்திலிருந்தும் பெறப்படுகின்றன.

இந்த ஆலையின் மாதாந்திர விற்பனை சுமார் 46 இலட்சம் ரூபாய்!

இதில் பணியாற்றிடும் ஊழி யர்களுக்கென 17 குடியிருப்புகள் ஒரு மருத்துவமனையெல்லாம் கட்டித் தந்திருக்கிறார்கள். இங் குள்ளவர்களின் குழந்தைகள் படிக்கச் செல்லுவதென்றால் 8 கிலோ மீட்டர் தூரம் போக வேண்டியுள்ளது. எனவே, அந்த இளஞ்சிறார்கள் பள்ளி செல்ல வும் வீடுதிரும்பவும் ஆலை நிர் வாகமே ஒரு மாட்டு வண்டி ஏற் பாடு செய்து தந்திருக்கிறது.



ஆலையில் பணிபுரிவோருக்கு இலவசமாகத்தேனீர் மட்டுமல்ல; அவர்களுடைய வீட்டு உபயோகத் திற்கு இலவசமாகப் பனைவெல் லமும் தரப்படுகிறது.

இந்தக் கூட்டுறவு நூற்பாலை யில் 25 ஆயிரத்து 20 தறிகள் இருக்கின்றன. பவர் லூம்களுக்கு ஏற்றபடி இவர்களே தகுந்த பீம் களும் தயாரித்துத் தருகிறார்கள்.

கடந்த ஆண்டிலே மட்டும் ரூ. 9.55 இலட்சம் இலாபம் சட் டியுள்ள தாராபுரம் கூட்டுறவு நூற்பாலைக்குப் பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவரான திரு பி.வி.ராஜாராமன் இ.ஆ.ப. தலைவர்; நிர்வாக மேலாளர் திரு கோவிந்தன்.

# ஆசியாவிலேயே மிகப்பெரிய ரயில் பெட்டித் தொழிற்சாலை

ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குத் துரிதமாகச் செல்ல உதவும் சாதனங்களில் ரயிலும் ஒன்று என்பதை நாமறிவோம்.

அறிவியல் வளர வளர போக்குவரவுச் சாதனங்களும் பெருமளவில் வளர்ந்து கொண்டு வருகின்றன. மின்னல் வேகத்தில் பறந்து செல்லக்கூடிய அதி நவீன விமானங்களும், ஆழ்கடலில் ஆயிரக்கணக்கான பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடிய கப்பல்களும் மற்றும் பேருந்து போன்ற பிறவகைச் சாதனங்களும் இன்று பல்கிப் பெருகி இருக்கின்றன.

நெடுந்தொலைவில் உள்ள ஊர்களுக்கு, கொஞ்சங்கூட அலுப்புத் தட்டாத வகையில், விரைந்து செல்லக்கூடிய, ஏழை எளியவர்கள் மற்றும் நடுத்தர மக்கள் பயணம் செய்யக்கூடிய போக்குவரவுச் சாதனங்களில் ரயில் முக்கியத்துவம் பெறுகிறது எனலாம்.

பயணிகளுக்கு மட்டுமல்ல, அவர்களுடைய சாமான்களையும் தபால்களையும் கொண்டு செல்ல ரயில்கள் பெரிதும் உதவுகின்றன.

வேகத்தை அதிகரிக்கும் வகையில் மிக்க விவேகத்துடன் தயாரிக்கப்படும் வண்ண வடிவமைப்புகளுடன் கூடிய ரயில் பெட்டிகள்தான் எத்தனை! எத்தனை!

தமிழ்நாட்டில், தயாரிக்கப்படுகின்ற இந்த இரயில் இணைப்புப் பெட்டிகள், இந்தியாவின் பல மாநிலங்களிலும் ஓடுகின்றன. ஏன், உலக நாடுகள் பலவற்றுக்கும் இங்குத் தயாராகின்ற இணைப்புப் பெட்டிகள் பெருமளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அந்த அளவுக்குப் பேரும் புகழும் பெற்றுத் திகழ்கிறது, ஐ.சி.எஃப். எனப்படும் பெரம்பூர் இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை (Integral Coach Factory).

29 ஆண்டுகளுக்கு முன்னால், 1955-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2-ஆம் நாளன்று சென்னை பெரம்பூரில் இணைப்புப் பெட்டித் தொழிற்சாலையில் முதல் மூன்றாவது வகுப்புப்பெட்டி தயாராகி வெளிவந்தது. இதற்கான கூண்டுப் பொருள்களை ஸ்விட்ஸர்லாந்து, ஸ்விஸ்கார் மற்றும் எலிவேட்டர் கூட்டு நிறுவனம் வழங்கியது. உற்பத்தியை, அப்பொழுது பிரதமராக இருந்த பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் தொடங்கி வைத்தார். ஐ.சி.எஃப் என்று அழைக்கப்படும் இந்தத் தொழிற்சாலை 29 ஆண்டுகளுக்குள் 'சர்வதேசப் புகழ்' பெற்று விளங்குகிறது. இன்று ஆசியாவிலேயே மிகப் பெரிய ரயில் பெட்டித் தொழிற்சாலையாக விளங்குகிறது.

உற்பத்தியின் முதல் ஆண்டில் 12 ரயில் பெட்டிகளே உற்பத்தி செய்யப்பட்டன. அதன் பிறகு 350 ரயில் பெட்டிகள் என எண்ணிக்கை உயர்ந்தது. 1962ல் முழு அளவில் தொழிற்சாலை இயங்க ஆரம்பித்தது. ஆண்டுக்கு 720 ரயில் பெட்டிகள் உற்பத்தியாகின்றன.

1984 ஏப்ரல் இறுதிவரை 14,982 ரயில் பெட்டிகள் வெளிவந்துள்ளன. இவற்றின் மதிப்பு ரூ.630 கோடியாகும். இந்தத் தொகைக்குச் சமமான அந்நியச் செலாவணி மிச்சமாகியுள்ளது. நாட்டிற்குத் தேவையான அதாவது தன்னிறைவு பெறும் வகையில் உற்பத்தியை இத்தொழிற்சாலை எட்டியுள்ளது. ஏற்றுமதி மூலம் ரூ.25 கோடிக்கும் மேல் ஈட்டப்பட்டுள்ளது.

இந்தத் தொழிற்சாலை சர்வதேசப் புகழ் வாய்ந்ததாக ஆசியாவில் முன்னணியில் இருந்து வருகிறது. தொழில் நுட்பத்தில் சிறந்து விளங்கும் இந்தத் தொழிற்சாலை, மற்ற நாட்டினரும் திருப்தி கொள்ளும் வகையில் அரிய பணி புரிந்து வருகிறது.





**குளிர்பதனம் செய்யப்பட்ட இரண்டு அடுக்கு இணைப்புப் பெட்டியின் உட்புறத் தோற்றம்.**

இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை இரு பெரும் பகுதிகளாக இயங்கி வருகிறது. ஒன்று, கூண்டுப் பகுதி (Shell), மற்றொன்று, பெட்டிகளின் உட்புறம் உருவாகும் பகுதி (Furnishing).

ரயில் பெட்டிகள் தயாரிப்புக்கு முக்கியமான மூலப் பொருள் எஃகினாலான தகடுகள். கூண்டுப் பகுதியில் ரயில் பெட்டிக்கான வெளிப்புற அமைப்பு தயாரிக்கப்படுகிறது. அதாவது இங்கே கூடு மட்டுமே தயாராகிறது. இங்கே நாம் பார்க்கும் எஃகுத் தகடுகள் முடிவில் ரயில் பெட்டியாக உருமாறி இருப்பதைக் கண்டு வியக்கிறோம்.

கூண்டுப் பகுதியில் 'போகி' எனப்படும் ரயில் பெட்டியின் அடிப்பாகம், பக்கச்சுவர்கள், மேற்பகுதி எல்லாம் உருவாக்கப்படுகின்றன. பிறகு இவை Furnishing பிரிவுக்குக்கொண்டு செல்லப்படுகின்றன. இங்குதான் இந்தக்கூடு முழு வடிவம் பெறுகின்றது. ரயில் பெட்டியில் ஜன்னல்கள், இருக்கைகள், தரை, மின் விளக்குகள், மின் விசிறிகள் முதலானவை அமைக்கப்படுகின்றன. இந்தப் பிரிவில்தான் ரயில் பெட்டிகள் ரம்மியமாகக் காட்சியளிக்கும் வகையில் வண்ணந் தீட்டப்பட்டு, நாம் பயணம் செய்யத் தயார் நிலையில்வெளிவருகின்றன.

இணைப்பு நுட்பமும், கனக்குறைவானதும், எல்லாம் எஃகினாலானதும், காய்ச்சிப் பிணைக்கப்பட்டதுமானவடிவமைப்புடன் இந்த ரயில் பெட்டிகள் விளங்குகின்றன. பாதுகாப்பு, விரைவு, வசதி ஆகிய மூன்று தேவைகளுக்கும் ஏற்ப இந்தப் பெட்டிகள் கட்டப்படுகின்றன. விபத்துக்களின்போது பயணிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் இவை உருவாக்கப்பட்டுள்ளன. நல்ல பயணத்திற்கும், குறைந்த பராமரிப்புச் செலவிற்கும் ஏற்றவாறு இவை உள்ளன.

ஐ.சி.எஃப். கட்டும் ரயில் பெட்டிகள் அகலப் பாதையில் (பிராட் கேஜ்) மணிக்கு 140 கி.மீ. வேகத்தையும், மீட்டர்கேஜ் பாதையில் 100 கி.மீ. வேகத்தையும் தாங்கக்கூடியவை. குறிப்பிட்டதற்கும் அதிகமான வேகத்தில் செலுத்தப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவை.

ஐ.சி.எஃப்பில் சுமார் 15,000 பேர் பணியாற்றுகிறார்கள். இவர்கள் எல்லோருடைய கை வண்ணத்தால் இணைப்புப் பெட்டிகள் உருவாகின்றன.

இணைப்புப் பெட்டிகள் பல்வேறு வடிவமைப்புகளுடன், வசதிகளுடன், வண்ணங்களுடன் தயாரிக்கப்படுகின்றன. அதே சமயத்தில் தரம் மிக முக்கியமாகக் கவனிக்கப்படுகிறது. அதனால்தான் உலக நாடுகள் பல தங்களுக்குத் தேவையான இணைப்புப் பெட்டிகளுக்கு மனமுவந்து 'ஆர்டர்' தருகின்றன.

தாய்லாந்து, பர்மா, தைவான், ஜாம்பியா, பிலிப்பைன்ஸ், தான்சானியா, உகாண்டா, வியட்நாம், நைஜீரியா, மொசாம்பிக், பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்குப் 'போகிகளும், இணைப்புப் பெட்டிகளும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

1982-83ல் 750 இணைப்புப் பெட்டிகள் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால் இலக்கையும் விஞ்சி 775 இணைப்புப் பெட்டிகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இதற்குக் காரணம், திறமையான நிர்வாகமும், கடின உழைப்புமே ஆகும். இப்பொழுது முடிந்த 1983-84ஆம் ஆண்டில், எப்பொழுதும் இல்லாத மிகப் பெரிய எண்ணிக்கையான 817 பலரகப் பெட்டிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இது மிக அதிக உற்பத்தித் திறனான 750 பெட்டிகளைவிட 67 பெட்டிகள் அதிகமாகும் அடுத்த ஆண்டு இந்த இலக்கு 825 ஆக இருக்கும்.

இலக்குகள் 850-1000 வரை போய்க் கொண்டே இருக்கும். இதனால் உற்பத்தி பெருகுகிறது. அதன் மூலம் வேலை வாய்ப்பு ஏற்படுகிறது. அதே சமயத்தில் இது சம்பந்தமான துணைத் தொழில்கள் பெருகவும் உதவுகிறது. இங்குத் தயாராகும் இணைப்புப் பெட்டிகள் இந்திய இரயில்வேக்கள் முழுவதற்கும் அனுப்பப்படுகின்றன.

கல்கத்தாவில் விரைவுப் போக்குவரவுக்காகப் பாதாள இருப்புப்பாதை அமைக்கப்பட்டு வருகிறது. மொத்தமாக முதல்

**தாய்லாந்துக்கு ஏற்றுமதியாகும் 'போகி'**



கூட்டத்தில் 144 பெட்டிகள் செய்யப்பட இருக்கின்றன. 8 மாதிரிப் பெட்டிகள் தயாரிக்கப்பட்டுவிட்டன. டம்டம் ரயில் நிலையத்திற்கும், பெல்காச்சியா ரயில் நிலையத்திற்குமிடையே சோதனை ஓட்டத்தில் இவை ஏற்றதாக அமைந்தன. இதுவரை 20 பெட்டிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பெட்டியும் 19.5 மீட்டர் நீளம், 2.75 மீட்டர் அகலமுள்ளவை. 300 பயணிகளுக்கு இருக்கை வசதிகளுண்டு. மணிக்கு 80 கி.மீ. வேகத்தில் சென்றாலும் அதன் பளுவைத் தாங்கக் கூடியவை. தாமாக மூடித் திறக்கும் கதவுகள் பொருத்தப்பட்டுள்ளன. கதவுகள் மூடப்பட்ட பின்னர்தான், ரயில் வண்டி புறப்படும்! மனிதர்கள் தவறினாலும் பாதுகாக்கக்கூடிய தானியங்கி தடுத்து நிறுத்தும் சாதனம், (Automatic Brakes) இவ்வண்டியில் உள்ளது.

இணைப்புப் பெட்டிகளில் வகை வகையானவை தயாரிக்கப்படுகின்றன. 2 அடுக்கு 3 அடுக்குகள் தூங்கும் வசதியுள்ள இணைப்புப் பெட்டிகள் மற்றும் உணவருந்துவதற்கான வசதி, குளிர்சாதன வசதி, பெண்களுக்கெனப் பிரத்தியேகப் பெட்டிகள் இப்படிப் பல வசதிகளுடன்-வடிவமைப்புகளுடன் இணைப்புப் பெட்டிகள் தயாரிக்கப்படுகின்றன. முதலில் ஒரே வகை என்று ஆரம்பித்து இன்று 100 ரகங்களில் இணைப்புப் பெட்டிகள் என்று அதன் உற்பத்தி வளர்ந்திருக்கின்றது.

இந்தியாவில் மூன்று இடங்களில் இணைப்புப் பெட்டிகள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் உள்ளன. அவை பெங்களூர், கல்கத்தா, சென்னை ஆகிய இடங்களில் உள்ளன. சென்னையிலுள்ள இணைப்புப் பெட்டித் தொழிற்சாலைதான் ஆசியாவிலேயே மிகப் பெரியது. உலகத்தில் இவ்வளவு ரகங்கள் செய்யக்கூடிய இணைப்புப் பெட்டித் தொழிற்சாலையும் இது ஒன்றே!

நெடுந்தொலைவு, அதே சமயத்தில் விரைந்து செல்லும் இணைப்புப் பெட்டிகளில் நல்ல இருக்கைகளுடன் 3 மின் விசிறிகள், தண்ணீர்த் தொட்டி போன்ற வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. இவை திரைச்சீலைகளுடன் கூலிங்கிளாஸ் பொருத்தப்பட்டு ஒரு அழகிய வீட்டு அறை போலவே காட்சியளிக்கும். விரைவு வண்டிகள் வகை: திப்பு, தமிழ்நாடு எக்ஸ்பிரஸ், கிராண்ட் ட்ரங்க் எக்ஸ்பிரஸ், நவஜீவன் எக்ஸ்பிரஸ் போன்றவை குறிப்பிடலாம். அதிவேகமாக ஓடக்கூடிய ரயில், ராஜ்தானி எக்ஸ்பிரஸ் ஆகும். மணிக்கு 120 கி.மீ. வேகம் செல்லக்கூடிய போகிகள், இணைப்புப் பெட்டிகள் தயாரிக்கும் திட்டமும் உள்ளது.

ஐ.சி.எஃப்பில் தயாராகும் இணைப்புப் பெட்டிகள் மற்றும் போகிகள் மொத்த உற்பத்தியில் 10 சதவிகிதம்தான் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. 90 சதவிகிதம் நமக்கு உபயோகமாகிறது.

இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை இருக்கும் பகுதியில், எல்லா வசதிகளும் உள்ளன. இதில் பணிபுரிபவர்களுக்கான குடியிருப்புகள், குடிதண்ணீர் வசதி, பள்ளிக் கூடங்கள், பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள், நீச்சல்குளம், கலையரங்குகள் கூட்டுறவுப் பண்டகச் சாலைகள், மருத்துவமனைகள் ஆகியவை உள்ளன.

இங்குப் பணிபுரியும் ஊழியர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் ஏற்படுகிற வகையில் பல பரிசுகளும் தரப்படுகின்றன.

ஒவ்வோராண்டும் நடைபெறுகின்ற ரயில்வே வாரத்தின் போது, சிறந்த முறையில் பணிபுரிந்தவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. கலை நிகழ்ச்சிகளில் பங்கு பெறும் அவர்கள் குழந்தைகளுக்கும் பரிசுகள் தரப்படுகின்றன. இவையன்றி, தொழிலாளர்கள் விளையாட்டு, நாடகம் போன்றவற்றிலும் ஈடுபடுகின்றனர். அவர்களுக்கெல்லாம் மரியாதையும், ஊக்கமும் தருகின்ற வகையில் இந்த ரயில்வே வாரம் கொண்டாடப்படுகிறது. இந்தியாவில் ரயில்வே தொடங்கி 131 ஆண்டுகளாகின்றன. ரயில்வே நூற்றாண்டு விழா முதல், ரயில்வே வாரம் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்வாண்டு (1984) கொண்டாடப்படுவது 29-வது ரயில்வே வாரமாகும்.

இந்த ஆண்டு ரயில்வே வாரத்தின் போது ஐ. சி. எஃப். தொழிற்சாலை ஊழியர்களுக்குப் பிரத்தியோகமான ஒரு மருத்துவமனையை மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்கள் திறந்துவைத்துள்ளார்.

தொழிற்சாலையைச் சுத்தமாக வைத்திருத்தல், விபத்துக்கள் இல்லாமல் பார்த்துக் கொள்ளல் போன்றவற்றுக்கும் ரொக்கப் பரிசு மற்றும் வெள்ளிப் பதக்கங்கள் வழங்கப்படுகின்றன. புதிதாகக் கண்டுபிடித்தல் அல்லது பயனுள்ள யோசனைகளுக்கும் கூடப் பரிசுகள் உண்டு. இதே போலத் தாங்கள் வசிக்கும் குடியிருப்புகளைச் சுத்தமாக வைத்துக் கொள்பவர்களுக்கும், நல்ல காய்கறித் தோட்டம் போடுபவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்படுகின்றன. இத்தொழிற்சாலையில் ஓர் ஊழியர் இறந்துவிட்டால் ஆளுக்கு ஒரு ரூபாயாக இறந்த ஊழியர் குடும்பத்துக்குச் சுமார் 16,000 ரூபாய் தருவதையும் இங்குக் குறிப்பிட வேண்டும்.

தரம் - கடின உழைப்பு - நல்ல வடிவமைப்பு ஆகியவற்றின் மூலம் உலக அரங்கிலே புகழ்க் கொடி ஏற்றி வருகிறது, மூன்றெழுத்துப் பெருமையுள்ள பெரம்பூர் இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை!

—பி. வி. கிரி



கல்கத்தாவில் விரைவுப் போக்குவரவுக்கான பாதாள இருப்புப் பாதையில் செல்லும் ரயில்.

# வண்டலூர் உயிரியல் பூங்கா



சென்னை - சென்ட்ரல் நிலையத்தின் அருகேயிருந்த மிருகக் காட்சிசாலையை வண்டலூருக்கு மாற்றியிருக்கிறார்கள்; நகரவாசிகள் சிலருக்கு இது சங்கடமாக இருக்கலாம்; ஆனால் அந்த மிருகங்கள் அங்கே மிக மகிழ்ச்சிகரமாகக் காணப்படுகின்றன.

1265 ஏக்கர் பரப்பளவில் உள்ள மலைச் சரிவில்', வண்டலூரில் அமைக்கப்பட்டுள்ள இந்த உயிரியல் பூங்காவுக்கு வருகை தருவோர் எப்படி விலங்கினங்களை வேடிக்கை பார்க்கிறார்களோ, அப்படி அந்த விலங்கினங்களும் காணவருவோரை வேடிக்கை பார்த்து வியந்து திரிகின்றன. ஊக்கமாகவும் உற்சாகமாகவும் காட்சியளிக்கின்றன.



ஆம்; முன்பு சிறைக்கைதிகளைப் போல வைக்கப்பட்டிருந்த யானை, மான், முயல், காட்டெருமை, நீர்யானை, குரங்கினங்கள், பறவையினங்கள் போன்றவை இப்போது சுதந்திரமாக இங்கே அலைந்து திரிகின்றன. அந்த வகையில் அலாதிக் கவனத்தோடு அமைக்கப்பட்டிருக்கிறது வண்டலூர் உயிரியல் பூங்கா.

கடந்த ஆண்டு பிப்ரவரித் திங்கள் 3ஆம் நாளன்று மாண்புமிகு செய்தி -அறநிலையம் - சுற்றுலா மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்களால் விலங்குகள் விடப்பட்டுத் துவக்கி வைக்கப்பட்ட இந்த உயிரியல் பூங்கா சிறப்புற அமைய மூன்று கோடி ரூபாயளவில் திட்டம் திட்டப்பட்டது. ஆனால் கூடுதல் நிலத்தைக் கையகப்படுத்தல், மரம் நடுதல், சாலைகள் அமைத்தல் போன்ற வகையில் அந்தச் செலவினம் சற்று விரிவாகும் என்றே தோன்றுகிறது.

5ஏக்கர் பரப்பளவில்இங்கேயே தனிப்பட அழகுற அமைக்கப்பட்டுள்ளது சிறுவர் பூங்கா. பச்சைப்பட்டு விரித்தாற் போன்ற புல்வெளி, பகட்டுக் காட்டும் வண்ணமலர்ச் செடிகள் மட்டுமல்ல; மான்கள், முயல்கள், பறவையினங்களெல்லாம் இப்பகுதியில் உலாவரும். விரும்பும் சிறுவர்கள் அவைகளோடு விளையாடலாம்; தொட்டுப் பழகலாம்.

## திரு வி. க. தொழிற்பேட்டை

தமிழ்நாட்டில் தொழிற்சங்கத் தலைவராகப் புகழொளி பரப்பிய தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்களை நினைவு கூரும் வகையில், சென்னை கிண்டியில் உள்ள தொழிற்பேட்டைக்கு "கிண்டி-திரு-வி.க.தொழிற்பேட்டை" எனத் தமிழக அரசு பெயர் சூட்டியுள்ளது. இந்தியத் துணைக் கண்டத்தில் முதல் தொழிற்சங்கத்தைத் துவக்கியவர் திரு. வி. க. என்பது குறிப்பிடத்தக்கது.





வண்டலூர் உயிரியல் பூங்காவின் இயக்குநரான திரு. எஸ். சுப்பராயலுவிடம் இப்போது இப்பூங்காவிலுள்ள உயிரினங்கள் பற்றிய விவரம் கேட்டோம். அதற்கு அவர் இப்படிப் பதிலளித்தார்:

''25 வகைப் பாலூட்டிகள் 170 இங்கிருக்கின்றன; 55 வகையான பறவையினங்கள் 170 உள்ளன. ஊர்வன 15 இருக்கின்றன. மைசூர் உயிரியல் பூங்காவிலிருந்து காண்பதற்கு அரிதான மணிப்பூர்மான்களும் வராகமான்களும் வாங்கியிருக்கின்றோம். குஜராத்திலிருந்து சிங்கமும், ஒரிசாவிலிருந்து சிறுத்தை-புலி- முதலைகள் போன்றவைகளும் இங்கு வர இருக்கின்றன. அஸ்ஸாமிலிருந்து காண்டா மிருகம் வாங்கவும் ஒரு யோசனை இருக்கிறது. இந்த உயிரியல் பூங்காவுக்குக் கவர்ச்சிகரமான நுழைவு வாயில் அமைக்கவும், மலைச்சரிவில் செயற்கை நீர்வீழ்ச்சி உருவாக்கவும் திட்டமிருக்கிறது.

''80 ஆயிரத்திற்கு மேலான மரங்களுக்கான கன்றுகள் இந்தப் பூங்காவில் பரவலாக நடப்பட்டிருக்கின்றன. மரங்கள் நிறைந்த பெரிய திட்டு ஒன்றில் ஏழு யானைகள் விடப்பட்டுள்ளன. அந்தத் திட்டைச் சுற்றி வெட்டப்பட்டுள்ள பெரிய அகழி தண்ணீருக்காகக் காத்திருக்கிறது.

''நிலத்தடி நீர் இப்போது நாளொன்றுக்கு ஒரு இலட்சம் காலன்தான் கிடைக்கிறது. ஆனால் 3 இலட்சம் காலனுக்கு மேல் இங்கே தண்ணீருக்கான தேவையிருக்கிறது; பாலாற்றிலிருந்து இங்கே தண்ணீர் கொண்டுவர ஏற்பாடு செய்திருக்கிறோம். இந்த ஆண்டுக்குள் அந்தத் திட்டம் நிறைவேறிவிடும். பிறகு ஒரு குறையுமில்லை என்றார் உயிரியல் பூங்கா இயக்குநர்.

சிங்கவால் குரங்குகள், நீர் யானைகள், மணிலா வாத்து போன்ற சிலவகை நூதனப் பறவையினங்கள், முதலைகள், காட்டெருமை போன்றவை உள்ள இடங்களைச் சுற்றி அவைகள் வெளியேற முடியாத வகையில்-அல்லது நீந்தி மகிழும் விதத்தில் நிறையத் தண்ணீர் விடப்பட்டுள்ளது.

பக்கத்தில் இருக்கிற 700 அடி உயர மலையிலிருந்து மேனோ ரயில் மூலம் (இருப்புக் கயிற்று வழியே அந்தரத்தில் வருவது) இந்தப் பூங்காவைக் கண்டுகளிக்கச் செய்வதற்கான ஏற்பாடொன்றும் ஒற்றைத் தண்டவாள ரயில் ஏற்பாடும் பரிசிலனையில் இருப்பதாகச் சொன்னார் துணைஇயக்குநர் திரு நீலகண்டன்.

இப்பூங்காவில்-கிளிஇனத்தைச் சேர்ந்த காக்கட்டு என்றொரு பறவை இருக்கிறது; வெள்ளை வெளேரென்று மிகப் பெரியஅளவிலுள்ள இந்த ஆண் பறவைக்குப் பெண் துணையும், இங்குள்ள தேவி என்கிற ஆப்பிரிக்கப் பெண் சிங்கத்திற்கு ஆண் துணையும்,

தென் கிழக்காசியாவிலேயே இப்படி வேறெங்கும் இல்லை என்ற அளவில் பெரியதாக அமைந்துள்ள கூண்டிலிருக்கும் தனித்துக் கிடைத்த ஐரோப்பிய பெண் கழுகுக்கு ஆண் துணையும் விரைவில் வெளிமாநிலங்களிலிருந்து தருவிக்கப்பட இருக்கின்றனவாம். சில உயிரினங்கள் மற்ற மாநிலங்களிலிருந்து பரிவர்த்தனை முறையிலும் வாங்கப்படுகின்றன.

இந்தியாவிலேயே, ஆப்பிரிக்கச் சிங்கம் வண்டலூர் உயிரியல் பூங்கா தவிர வேறெங்கும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இங்குள்ள விலங்கினங்களையும் பறவையினங்களையும் பாம்பினங்களையும் பரிசோதித்துச் சிகிச்சை அளிப்பதற்கெனத் தனியொரு மருத்துவ மனை மூன்றரை இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உயிரியல் பூங்காவினுள்ளே அரசால் கட்டப்பட்டு வருகிறது.

மிகப் பெரிய அளவிலே உருவாக்கப்பட்டு வரும் வண்டலூர் உயிரியல் பூங்காவினைக் கண்டானந்திக்க வருவோர் தங்கிக் களைப்பாற ஆங்காங்கே பத்து ஓய்விடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நகருக்கு வெளியே அமைக்கப்பட்டிருந்தாலும்கூட பேருந்துகள் மூலமும், மின்சார ரயில் மூலமும் மாணவச் செல்வங்கள் உட்பட ஆயிரக் கணக்கான மக்கள் இந்த உயிரியல் பூங்காவுக்கு தினமும் வந்து போகிறார்கள்.

உயிரினங்களைக் கண்டு மகிழவும், அவற்றின் வாழ்க்கை முறைகளை அறிந்துணரவுமே அமைக்கப்பட்டுவரும் இந்த உயிரியல் பூங்காவுக்கு நுழைவுக் கட்டணம் ஏதும் இல்லை.

—இல. இராசேந்திரன்



# மாமல்லபுரம் வரலாறு படைக்கிறது!

மாமல்லபுரத்தில், தமிழகத்தின் வரலாறு, பண்பாடு ஆகியவற்றை விளக்கும் விதத்தில் திறந்த வெளி அரும்பொருட்காட்சியகம் ஒன்று நிறுவுவதற்கான ஆக்கப்பணி இரவுபகலாக நடைபெற்று வருகிறது.

கடற்கரைக் கோயிலுக்கு இடபுறமுள்ள 25 ஏக்கர் நிலத்தில் அமையவிருக்கும் இந்தக் காட்சியகத்தில் தமிழ்நாட்டின் மூவாயிரம் ஆண்டுக்கால வரலாறு சிற்பங்களாகவும் சித்திரங்களாகவும் நிறுவப்படும்.

இதற்கான நுழைவுவாயில் 35 அடி அகலமும், 25 அடி உயரமும் கொண்டதாக மிக நுணுக்கமாக உருவாகும்.

நிலந்தரு திருவிற்பாண்டியன் சமநீதி கண்ட சோழன் போன்ற மாமன்னர்களின் திருவுருவச் சிலைகள் அமைகிறதென்றால் அவற்றின் கீழே அவர்களைப் பற்றிய வரலாற்றுக் கல்வெட்டும் இடம்பெறும்.

இந்தக் காட்சியகம் எப்படியெல்லாம் இருக்கவேண்டும் என்பதை நிர்ணயிக்கத் தமிழறிஞர் ஐவர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

காட்சியகத்திற்கான சிற்பங்கள் மாமல்லபுரத்திலுள்ள அரசு சிற்பக்கலைக் கல்லூரி முதல்வரான திரு வி. கணபதி ஸ்தபதி மேற்பார்வையில் சுமார் 150 பேர்களால் திறம்படச் செய்யப்பட்டு வருகின்றன.

இந்தத் திறந்த வெளிக் காட்சியகம் அமைய 20ல் இருந்து 35 இலட்சம் ரூபாய் வரை செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றார் சுற்றுலாத் துறைத் துணை இயக்குநர் திரு. சீனிவாசன்.



# வேடந்தாங்கல்

அக்டோபர் முதல் மார்ச்சு திங்கள் வரையிலேதான் வேடன் தாங்கலுக்கு வித விதமான பறவைகள் வரும் என்பதில்லை; இப்போதும் அங்கே பல்லாயிரக் கணக்கான பறவைகள் காணப்படுகின்றன காகம் தவிர!

தமிழ் நாட்டில் வேட்டங்குடி கோடியக்கரையெல்லாம் கூட பறவைகள் சரணாலயமே என்றாலும், செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த மதுராந்தகத்தின் அருகே இருக்கும் வேடன் தங்கலே இந்த வகையில் முதலிடம் பெறுவதாகும்.

73 ஏக்கர் பரப்பளவில் பரவிக் கிடக்கும் ஏரியில் பரவலாகக் காணப்படும் கருவேலமரம், கடம்பமரம் மூங்கில்புதர்கள் ஆகியவற்றில் இலைகளைவிட அதிகமாக வித விதமான பறவைகளே தென்படுகின்றன. தமிழ்நாடு அரசு வனத்துறைப்பராமரிப்பிலிருக்கும் வேடன் தங்கல் ஏரியில் ஆயிரக்கணக்கான மரக்கன்றுகளும் புதிதாக நடப்பட்டிருக்கின்றன. பறவைகள் முட்டையிடத்தக்க இடங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

சைபீரியா, கனடா போன்ற இடங்களிலிருந்து அயல்நாட்டுப் பறவைகளெல்லாம் ஆசையோடு வரக்கூடிய இங்கே அவைகளைக் காணச் சுற்றுலாப் பயணிகளும் பல்லாயிரக் கணக்கில் நாள் தோறும் வருகை தருகிறார்கள்.

''ஏறத்தாழ முந்நூறாண்டுக் காலமாகப் பறவைகளின் சரணாலயமாக இருக்கிறது வேடன் தங்கல்'' என்ற தேசியப்பூங்கா கண்காணிப்பாளர் திரு, முகமது இக்பால் பாஷா 'இதை மேம்படுத்துவதற்கான பணிகள் பலவற்றை அரசு மேற்கொண்டுள்ள' தாகக் கூறியதோடு, ''பறவைகளின் கழிவு கலந்த இந்த ஏரிநீர் இயற்கை உரம்போலப் பயிர்களுக்குப் பயன்படுவதால், இந்தப் பகுதி மக்கள் பறவைகளை வேட்டையாடுவதில்லை; தீபாவளிக்கு வெடிகள் கொளுத்திக் கூட அவைகளுக்குத் துன்பம் தருவதில்லை'' என்றும் நமக்குத் தெரிவித்தார்.



# நெசவாளர் நலம் காப்போம்!



சென்னையில் நடைபெற்ற 30 வது கண் காட்சியின் நிறைவு விழா, சென்னையில் (10.5.'84) நடைபெற்றது.

கைத்தறி மற்றும் துணிநூல் துறை இயக்குநர் திரு. வினய்ஜா இ.ஆ.ப., தொழில் துறை ஆணையர் மற்றும் செயலர் திரு. செல்வ ராஜ், இ.ஆ.ப., கோ-ஆப்டெக்ஸ் ஆலோ சனைக் குழுத் தலைவர் அனகாபுத்தூர் திரு சி.



இராமலிங்கம் எம்.எல்.சி., கோ-ஆப்டெக்ஸ் தனி அலுவலர் திரு. மா.தேவராஜ், கோ-ஆப் டெக்ஸ் பொது மேலாளர் திரு. வி.சித்தா ராமன் ஆகியோர் இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

சிறந்த கைத்தறித் துணி ஏற்றுமதியா ளர்க்கும், விற்பனையாளர்க்கும் பரிசுகள் வழங்கப்பட்ட இவ்விழாவில்- கைத்தறிக் கண் காட்சி பற்றியும், கைத்தறிபற்றியும் அவர் களால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் பின் வருமாறு;

கடந்த ஆண்டில் 82 கோடி ரூபாய்க்குக் கைத்தறித் துணிகள் விற்பனையாகியுள்ளன; இந்த ஆண்டு அந்தத் தொகை ரூ. 105கோடி யாக உயரலாம்.

வரும் ஆண்டு 'கோ-ஆப்டெக்சி'ன் பொன்விழா ஆண்டு.

கைத்தறிக் கண்காட்சி, சென்னையிலும் மாவட்டத் தலைநகர்களிலும் கடந்த முப்ப தாண்டுக்காலமாக நடைபெற்று வருகிறது.

தொழில் துறையின் கீழ் சுமார் 15 துறை கள் உள்ளன; அவற்றில் கைத்தறித் துறை சிறந்து விளங்குகின்றது.

தமிழ்நாடு முழுமையிலுமாக ஏறத்தாழ 30 இலட்சம் குடும்பங்கள் கைத்தறித் தொழிலை ஆதாரமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றன; அயல் நாட்டுத் துணிகளின் மேல் உள்ள ஆசையை விடுத்து அனைவரும் கைத்தறித்துணிகளை வாங்கி அந்தக் குடும் பங்களை வாழவைக்க வேண்டும்.

மத்திய அரசு எடுத்துக்கொள்ளும் 'சிக் மில்ஸ்' மூலம் உற்பத்தியாகும் துணி ரகங்கள் மிகக் குறைந்த விலைக்கு விற்கப்படுவதால் கைத்தறித் துணிகளின் விற்பனை பாதிக்கப் படுகிறது. இதனால் கைத்தறிக்கென்றே சில குறிப்பிட்ட ரகங்கள் ஒதுக்கித் தருமாறும், நெசவுத் தொழிலைப் பொறுத்தமட்டில் ஒரு சீரான கொள்கையைக் கடைப்பிடிக்குமாறும் கேட்டு இந்தியப் பிரதமரிடம் மனுக் கொடுக் கப்பட்டுள்ளது.

சென்னையில், சென்ற ஆண்டு நடந்த கைத்தறிக் கண்காட்சியில் ரூ. 193 இலட்சம். அளவுக்கு இருந்த துணிகளின் விற்பனை, இந்த ஆண்டு 2 கோடியே 85 இலட்சம் ரூபாயள வுக்கு உயர்ந்திருக்கிறது.



# 1983-84ல் செங்கற்பட்டு மாவட்டத்தில் அரசு ஆற்றியுள்ள அரும்பணிகள்

**மாண்புமிகு தமிழக முதல்வரின் சத்துணவுத் திட்டம்**

செங்கல்பட்டு மாவட்டத்தில் 5,013 குழந்தைகள் சத்துணவு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இம்மையங்களில், வயது 2 முதல் 4 வரை, 5 முதல் 9 வரை மேலும் 10முதல்14வரையுள்ள5,39,522 குழந்தைகள் உணவருந்திப் பயனடைகிறார்கள்.

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 190 சத்துணவு மையக் கட்டடங்கள் கட்ட ஆரம்பித்து, 94 கட்டடங்கள் முடிவுற்றுள்ளன.

செங்கை மாவட்டத்தில் 9,200 ஓய்வூதியம் பெறும் முதியோர்களுக்கு இலவச உணவு வழங்கப்படுகிறது. 1.5.84 முதல், மேலும் 4,170 முதியோர்கள் பயனடைகின்றனர்.

**இலவச வேட்டி, சேலைகள் வழங்கல்:**

ரூபாய் 1 கோடியே 7 லட்சத்து 19 ஆயிரத்து453 செலவு செய்து நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு 2,59,813 வேட்டிகளும், 3,13,941 சேலைகளும் வழங்கப்பட்டன.

**மாவட்டத் தொழில் மையம்:**

சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் 3,668 பேர்களுக்குக் கடன் உதவி அளிக்கப் பரிந்துரை செய்யப்பட்டு, இவற்றில் வங்கிகள் மூலம் 2,365 நபர்களுக்கு ரூ.382.08 லட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில் ஆதி திராவிடர்கள் 442 பேர்கள். உதவி பெற்ற தொகை ரூ.68.45 லட்சம்.

**குடும்ப நலத்திட்டம்:**

இம்மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட இலக்கு 35,000. இதுவரை 35,735 அறுவைச் சிகிச்சைகள் நடந்துள்ளன. இலக்கைவிட 735 அறுவைச் சிகிச்சைகள் அதிகம் செய்யப்பட்டுள்ளது.

**கண் சிகிச்சை முகாம் திட்டம்:**

1983-84ல் இலக்கு 3,700 கண்புரை அறுவைச் சிகிச்சைகளாகும். கண்புரை அறுவைச் சிகிச்சைகள் 2922 இதுவரை செய்யப்பட்டுள்ளன.

**சிறு சேமிப்பு:**

சிறு சேமிப்பு இலக்கு ரூ.400 லட்சம். ஆனால் சாதனை ரூ.525 லட்சம். இலக்கை விட ரூ.125 லட்சம் அதிக வசூல் செய்யப்பட்டுள்ளது.

**கிராமப் பொதுக் கழிப்பிடங்கள்:**

1982-83 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட 489 பொதுக் கழிப்பிடங்கள் ரூ.69 லட்சத்து 68 ஆயிரத்து 350 செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

1983-84ஆம் ஆண்டிற்கு 1113 கழிப்பிடங்கள் கட்டுவதற்கு ரூ.1 கோடியே 59 லட்சத்து 8 ஆயிரத்து 300, ஒதுக்கப்பட்டு இதுவரையில் ரூ.18 லட்சத்து 15 ஆயிரம் செலவிடப்பட்டு,வேலை நடைபெறுகிறது. 222 கழிப்பிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்:**

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், இம்மாவட்டத்தில் உழவு மாடுகள், மாட்டு வண்டிகள், டயர் வண்டிகள் வழங்குவதற்கு மானியம் ரூ.31.27 லட்சம் வழங்கப்பட்டது. இதனால் 3632 நபர்கள் பயனடைந்துள்ளனர். இதில் 1552 பேர் ஆதி திராவிடர்கள்.95 பேர் பெண்கள் அடங்குவர்.

கறவை மாடுகள், ஆடுகள், வாத்துகள், பன்றி, கோழி வளர்த்தல் முதலியவற்றுக்காக மானியம் ரூ.119.38 லட்சம் வழங்கப்பட்டது. இதனால் 11,967 நபர்கள் பயனடைந்துள்ளனர். இதில் ஆதிதிராவிடர் எண்ணிக்கை 4,791. பெண்களின் எண்ணிக்கை 1,902.

சிறு பாசனம், பட்டு வளர்ப்பு, மீன் வளர்ப்பு, சுய வேலை வாய்ப்புப் பயிற்சி, தொழில்கள் திட்டம் முதலியவற்றிற்காக மானியம் ரூ.82.13 லட்சம் வழங்கப்பட்டது. இதனால் 9,329 பேர் பயனடைந்துள்ளனர். இதில் ஆதிதிராவிடர் எண்ணிக்கை 4,271; பெண்களின் எண்ணிக்கை 3,154.

**தேசிய வேலை வாய்ப்புத் திட்டம்:**

தேசிய வேலை வாய்ப்புத் திட்டத்தின்



கீழ் இம்மாவட்டத்தில் ரூ.169.75 லட்சம் செலவு செய்யப்பட்டது. 1,648 டன் அரிசி வழங்கப்பட்டது. 16.48 லட்சம் மனித வேலை நாட்கள் பயன்படுத்தப்பட்டன. தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் கீழ்க்கண்ட வேலைகள் செய்யப்பட்டன:

சமூகக் காடுகள் வளர்த்தலின்கீழ் 232 வேலைகள் முடிவுற்றுள்ளன. 24.56 லட்சம் செடிகள் நடப்பட்டுள்ளன. கிராமக் குளங்கள் 23ம், சிறு பாசன வேலைகள் 115ம், 230 குடி தண்ணீர்க் கிணறுகள் வெட்டுதல், 1091 கிராமச் சாலைகள் அமைத்தல், 111 பள்ளிக் கட்டடங்களுக்குரிய வேலைகள் நடைபெற்று அதில் 68 கட்டடங்கள் முடிவுற்றுள்ளன. சமுதாயக் கட்டடங்கள் 180 வேலைகள் நடைபெற்று, 157 கட்டடங்கள் முடிவுற்றுள்ளன. ஆதிதிராவிட மக்களுக்குக் கட்டடமாக வீடு கட்டுதலின்கீழ் 568 வேலைகள் எடுக்கப்பட்டு 86 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. ஆதி திராவிட மக்களுக்கு வீடு கட்டிக்கொள்ள நிலச்சீர்திருத்தம் செய்தலில் 3 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன.

**பட்டா வழங்குதல்:**

நலிந்த பிரிவினருக்குப் பட்டா வழங்குதலின் கீழ் இம்மாவட்டத்தில் பிற்பட்டோர் நலத்துறைமூலமாக 145 முடிதிருத்துவோருக்கு ரூ.92 ஆயிரம் செலவில் நிலம் கையகப்படுத்தப்பட்டு, இலவசமாக வீட்டு மனை வழங்கப்பட்டது.

ஆதிதிராவிடர் நலத்துறை மூலமாக 208 நபர்களுக்கு ரூ.10.95 லட்ச மதிப்புள்ள நிலங்கள் கையகப்படுத்தப்பட்டன.

மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் 3,533 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. இதில் தாழ்த்தப்பட்டோருக்கு 2,266 பட்டாக்களும், மலைச்சாதியினருக்கு 25 பட்டாக்களும், மற்றவர்களுக்கு 1,242 பட்டாக்களும் வழங்கப்பட்டன. விவசாய நிலப்பட்டாக்கள் 364 நபர்களுக்கு வழங்கப்பட்டன. இதில் தாழ்த்தப்பட்டோர் எண்ணிக்கை 154. மற்ற இனத்தைச் சார்ந்தவர் எண்ணிக்கை 210.

**ஆதிதிராவிடர் நலத்துறை:**

ஒரு ஏக்கருக்குக் குறையாமல் நன்செய் அல்லது புன்செய் நிலம் பாசன வசதியின்றி விவசாயம்செய்யமுடியாமல்வைத்திருக்கும்ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் கிணறு மற்றும் பம்பு செட்டு அமைப்பதற்காக நில வள வங்கி மற்றும் தேசிய வங்கிகள் மூலமாகப் பெறப்படும் கடன் தொகையில் 1/3 பங்கு அல்லது அதிக பட்சத் தொகையாக ரூ.5.000 மானியத் தொகையாக மேற்படி கடன்தாரர்களுக்கு வழங்கப்படுகிறது. இத் திட்டத்தின்படி நடப்பு நிதியாண்டிற்கு ரூ. 36,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

செங்கற்பட்டு மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலம் பள்ளியிலும், விடுதியிலும் படிக்கும் 11,960 மாணவர்களுக்கும், 18,824 மாணவிகளுக்கும் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு இலமாகச் சீருடைகள் வழங்கப்பட்டன.

கலப்புத் திருமணத் தம்பதிகள் 12 இணைகளுக்கு ரூ.48,000 அரசுச் சலுகையாக வழங்கப்பட்டுள்ளது.

45 நபர்களுக்குச் சலவைக் கருவிகளும், 12 நபர்களுக்கு முடிதிருத்தும் கருவிகளும் 4 நபர்களுக்குத் தச்சுக் கருவிகளும், 7 நபர்களுக்குத் தையல் இயந்திரங்களும் 1 நபருக்குக் கல்லுடைக்கும் கருவியும் இலவசமாக வழங்கப்பட்டன.

**பிற்பட்டோர் நலத்துறை:**

திருத்தணி கல்லூரி மாணவர்களுக்கு ரூ.8,10,000 மதிப்பீட்டில் புதிய விடுதிக்கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

112 நபர்களுக்கு வீட்டுமனை வழங்குவதற்காக ரூ.50,290 செலவில் 5.43 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. காஞ்சிபுரத்தில் 50 மாணவியருக்குப் புதிய கல்லூரி மாணவியர் விடுதியும், எல்.எண்டத்தூரில் 50 மாணவர்களுக்கான பள்ளி மாணவர் விடுதியும் துவக்கப்பட்டுள்ளன. ரூ.91,800 மதிப்புள்ள 270 சலவையாளர் கருவிகளும், ரூ.16,450 மதிப்புள்ள 165 முடி திருத்துவோர் கருவிகளும், ரூ.7,500 மதிப்புள்ள 50 போயர் கருவிகளும் இலவசமாக வழங்கப்பட்டன.

சலவையாளர்கள் வசதிக்காகப் பொன்னேரியில் ரூ.60 ஆயிரம் மதிப்பீட்டில் ''டோபிகானா'' கட்டப்பட்டு வருகிறது.

கல்லூரி மாணவர்கள் 3797 பேருக்கும், பள்ளி மாணவர்கள் 4626 பேருக்கும் உதவித்தொகையாக ரூ.7 லட்சத்து 53 ஆயிரத்து 40 வழங்கப்பட்டுள்ளது.

இரண்டு செட் சீருடைகள் ரூ.65,800 செலவில் மாணவ, மாணவியருக்கு இலவசமாக வழங்கப்பட்டன்.

ரூ.8,07,300 செலவில் பள்ளி மாணவ, மாணவியர் 995 பேருக்கும் கல்லூரி மாணவ மாணவியர் 250 பேருக்கும் அரசு விடுதிகள் 27ன் மூலம் இலவசமாக உணவு வழங்கப்பட்டது.

ரூ.31,000 செலவில் தனியார் விடுதி மாணவர்கள் 110 பேருக்கு இலவச உணவு அளிக்க மானியம் வழங்கப்பட்டது.

**தொகுப்பு:**

**ஆர். சடகோபன்**
**உதவி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**செங்கற்பட்டு மாவட்டம்.**



# அண்ணா பவள விழா நினைவு நடுநிலைப் பள்ளி

சென்னை மாநகராட்சியின் வருவாய் 29 கோடி ரூபாய். இதில் 10 கோடி ரூபாய்க்கு மேல் கல்விக்கு ஒதுக்கப்படுகிறது. சென்னை மாநகராட்சி நடுத்தரப்பள்ளி - உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளி என ஏறக்குறைய 400 பள்ளிகளை நடத்தி வருகிறது. 1984-85ஆம் ஆண்டில் புதிய பள்ளிகள் உருவாக்கப்படுவதற்காக ரூ.43இலட்சத்தை மாநகராட்சி ஒதுக்கியுள்ளது.

படிப்பு மட்டுமன்றி விளையாட்டுப் போன்றவற்றிலும் மாநகராட்சிப் பள்ளி மாணவர்கள் சிறந்து விளங்குகிறார்கள். சாரணர் இயக்கத்தில் சென்னை மாநகராட்சிப் பள்ளி மாணவர்கள் பங்கு பெற்று வருவதுடன், மாநில அளவிலும் இந்திய அளவிலும் பல பரிசுகள் பெற்று வருகின்றனர். குறிப்பாக சைதாப்பேட்டையில் உள்ள மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் கடந்த 4 ஆண்டுகளாக சாரணர் இயக்கப் பணிக்காக விருது பெற்று வருகின்றனர்.

தேனாம்பேட்டை எல்டாம்ஸ் ரோடு - திருவள்ளுவர் சாலை இரண்டும் சந்திக்கும் இடத்தில் 1919-ல் உருவாக்கப்பட்ட துவக்கப் பள்ளி, 1956ல் நடுநிலைப் பள்ளியாகியது. நாளடைவில் பள்ளிக் கட்டடம் பழுதாகி, பாழடைந்த மண்டபம் ஆகிவிட்டது. தற்போது - பேரறிஞர் அண்ணா அவர்களின் பவள விழா நினைவாக - பாழடைந்த கட்டடம் 4½லட்ச ரூபாய் செலவில் முற்றிலும் புதுப்பிக்கப்பட்டுள்ளது. தற்போது 333 மாணவர்கள் இங்கு பயில்கிறார்கள். 12 ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இந்தப் புதிய பள்ளியின் மூலம் தேனாம்பேட்டைப் பகுதி மக்களின் நீண்ட நாள் தேவை நிறைவேற்றப்படுகிறது. எதிர்காலத்திற்கும் நல்ல பலன் விளைய இருக்கிறது.

இந்தப் பள்ளியின் திறப்புவிழாவிற்குத் (5-5-'84) தலைமை ஏற்ற மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள், ''நலிந்த மக்கள்-பின் தங்கிய மக்கள் வாழும் பகுதி தேனாம்பேட்டை - ஆழ்வார்ப்பேட்டை ஆகிய பகுதிகளாகும். இங்கு தனியார் பள்ளி ஒன்று நடத்தப்பட்டு வருகிறது. அது திடீர் என்று மூடப்படப் போவதாக அறிவிப்பு வந்துள்ளது. அங்கு பயிலும் மாணவர்களின் எதிர்கால வாழ்வு பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. அந்த மாணவர்களுக்கு இந்தப் பள்ளியில் அனுமதி வழங்கப்படும். இதன் மூலம் பெற்றோர்களின் கவலை மறையும்'' என்று குறிப்பிட்டார்.

பள்ளிக் கட்டடத்தைத்திறந்து வைத்த மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம வீரப்பன், அவர்கள் ''பேரறிஞர் அண்ணா அவர்களின் பவளவிழா நினைவாக உருவாக்கப்பட்டுள்ள இந்தக் கட்டடம் கண்ணாடி மாளிகை போல் காட்சி தருகிறது. இந்தப் பகுதி மக்களின் குழந்தைகள் கல்வி பெற இந்த நடுநிலைப் பள்ளி உதவும்'' என்று குறிப்பிட்டார்.

தேனாம்பேட்டை அருள்மிகு பாலசுப்ரமணிய சுவாமி கோவிலைச் சேர்ந்த அங்காடிக் கட்டடத்திற்கு மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் அடிக்கல்நாட்டியபோது ''ஐந்தாண்டுகளுக்கு முன்பே, இந்தக் கட்டடம் 5½ கோடி ரூபாய் செலவில் 5மாடி கொண்ட வியாபார வளாகமாக உருவாக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டது. தற்போது ரூ 1½ லட்சம் செலவில் ஒரு திட்டம் தீட்டப்பட்டுள்ளது. தேனாம்பேட்டை சென்னையின் இதயம் போன்ற இடம். இதைச் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். ஆகவே, இந்த அங்காடிக் கட்டடத்தை மேல் தளமுள்ள கட்டடமாக அமைக்க வேண்டும்'' என்று தெரிவித்து, ''சென்னையிலும் பல மாவட்டங்களிலும் எத்தனையோ திருமண மண்டபங்களுக்கு, முந்திய அரசு, அடிக்கல் நாட்டிவிட்டுப் பணியை முடிக்காமல் விட்டிருக்கிறது. ஏறக்குறைய 50க்கும் மேற்பட்ட திருமண மண்டபங்கள் முடிவடையாத நிலையில் உள்ளன. புரட்சித் தலைவர் அவர்கள், அவற்றை எல்லாம் ஒவ்வொன்றாக முடித்து வருகிறார்'' என்றும் தெரிவித்தார்.

தொகுப்பு: —த. பி.

# இந்திய வீரர்களின் உலகச் சாதனை!



**1984**-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 7-ஆம் நாள்!

இந்திய இராணுவ வீரர்கள் சரித்திரம் படைக்கத் தொடங்கிய நாள்!

ஆம். காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரிக்கு 5000 கிலோ மீட்டர் தூரத்தை கிளைடர் விமானம் மூலம் பயணம் மேற்கொண்டது, ஒரு இந்திய இராணுவ வீரர்கள் குழு, கேப்டன் எச். ஜே. சிங் தலைமையில், ஐந்து இராணுவ வீரர்கள் இப்பயணத்தில் கலந்து கொண்டனர்.

இந்தத் தீரமிக்க பயணத்தில் எவ்வித இடையூறுமில்லாமல் வெற்றி வாகை சூடிய கேப்டன் சிங், கன்னியாகுமரிக் கடற்கரையில் மே திங்கள் 18-ஆம் நாள் இறங்கினார்.

முன்னும் பின்னும் இரட்டைக் கழுகு போன்ற அமைப்புடையது இந்தக் கிளைடர் விமானம். இது அமெரிக்காவில் தயாரிக்கப் பட்டது. இதன் எடை 94. 4 கி. கி. ஆகும். இதன் இறக்கை 10.5 மீட்டர். இதில் மோட்டார் சைக்கிள் என்ஜின் பொருத்தப்பட்டுள்ளது, இதன் விலை ரூ. 55,000.

கேப்டன் சிங் கன்னியாகுமரிக் கடற்கரைப் பகுதியில் இறங்கியதும், தென் மண்டல இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் திரு எச். சி. சச்தேவ், பிரிகேடியர் திரு எல். கே. பாட்ரா, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எல். கே. திரிபாதி இ. ஆ. ப. மற்றும் பொதுமக்கள் மிக்க உற்சாகத்துடன் வரவேற்றனர்.

கேப்டன் சிங்கின் இந்த மாபெரும் சாதனையை, மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு கியானி ஜெயில்சிங் அவர்கள், மாண்புமிகு பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள், மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்கள், இந்திய இராணுவத்தின் தலைமைத் தளபதி ஜெனரல் திரு ஏ. எஸ். வைத்தியா ஆகியோர் வெகுவாகப் பாராட்டியுள்ளனர்.

உலகிலேயே ஒரு கிளைடரின் உதவியோடு இவ்வளவு நீண்ட தூரம், இதற்கு முன் வேறு எவரும் பயணம் செய்தது இல்லை.

## அக்டோபர் மாதம் நகரசபைத் தேர்தல்

"சென்னை, மதுரை, கோவை மாநகராட்சிகளுக்கும், 91 நகரசபைகளுக்கும், 1984-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தேர்தல் நடைபெறும். இந்தத் தேர்தலையொட்டி மாநகராட்சி, நகராட்சி வாக்காளர்களுக்குப் புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டை கொடுக்க அரசு முடிவு செய்துள்ளது.

"ஏறத்தாழ 60 இலட்சம் அடையாள அட்டைகள் தயாரிக்கப்படும். அந்த அட்டையில், வாக்காளரின் புகைப்படம், அவரைப் பற்றிய விவரங்கள், வாக்காளர் பட்டியலிலுள்ள எண், அந்த நபரின் கையெழுத்து ஆகியவை இடம் பெற்றிருக்கும்" என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் செய்தியாளர்களிடம் கூறினார்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.


கோ-ஆப்டெக்ஸ் கைத்தறி சேலைகள்
ஆயிரம் மலர்கள் பூத்து குலுங்கும்
அழகோவிய சேலைகள்...
ண்ணைக் கவரும் கைத்தறித் துணிகள்
ண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
ளிர் அனைவரும் விரும்பும் அருமை
மை இழையும் ஆடைகள் ஆயிரம்
கைகள்...அழகார்ந்த ரகங்கள்
னைத்தும் உண்டு !
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

பதிவு எண். M. 8676 Licence No. TN/MS(C)/PP-23







தமிழரசு











